"ஈசன் நெறிபரப்ப இன்தமிழ் வளர்ப்போம்"

# கலசம்
# KALASAM

ஐப்பசி - கார்த்திகை - மார்கழி 2015



இயலானது கொண்டு நின் திருநாமங்கள் ஏத்துதற்கு
முயலாமையாற் தடுமாறுகின்றேன் இந்த மூவுலகுஞ்
செயலால் அமைத்த கலைமகளே நின் திருவருளுக்கு
அயலாவிடாது அடியேனையும் உவந்து ஆண்டருளே

ISSN 2055-6616

இலண்டனிலிருந்து இலவசமாக வெளிவரும் முதல் ஆன்மிகக் காலாண்டிதழ்

பெருமையுடன் 21 வது வருடத்தில்

# RUBY'S

CATERING

020 8799 7180

www.rubyscatering.co.uk - mail@rubyscatering.co.uk

| உன்னத உணவு | வைபவ மண்டபம் | மகோன்னத உபசரிப்பு |
|---|---|---|





திருமணம் – பிறந்த நாள் – பூப்புனித நீராட்டு விழா

கலாச்சார நிகழ்ச்சிகள் – விருந்து உபசாரம்

அரங்கேற்றம் – வளைகாப்பு – பெயர் சூட்டும் விழா





ACCREDITED SRILANKAN CATERERS @

Hilton THISTLE HOTEL Holiday Inn

உட்பட பிரபல ஹோல்களில் அங்கீகாரம் பெற்ற
தரம் மிகு இலங்கை மற்றும்
தென்னிந்திய உணவுத் தயாரிப்பாளர்கள்.......

Tel: 020 8799 7180

mail@rubyscatering.co.uk - www.rubyscatering.co.uk

மணி 23

# கலசம்
KALASAM

ஒலி 79

www.saivamunnettasangam.com

FREE ISSUE

# குளிக்கப் போய்.....

கடவுளை வழிபடுவதற்கு நாம் கோயிலுக்குப் போகிறோம். கோயிலிலே இறைவனை வழிபடவெனச் சில விதிகள் உண்டு. கோயிலுக்குப்போகு முன் குளிக்கவேண்டும்; தோய்த்து உலர்ந்த உடை அணியவேண்டும் என்றெல்லாம் ஆரம்பப் பாடசாலையிலே சமயம் படிக்கும்போதே கற்றுக்கொண்டோம். நாம் கற்கவேண்டியவை பல இருக்கின்றன.

கோயிலிலே நித்திய பூசைகள், நைமித்திய பூசைகள் நடக்கின்றன. நித்திய பூசையிலே, அபிடேகம், விசேட தீபாராதனை ஆகியவை முக்கியமானவை. நைமித்திய பூசையிலே, அபிடேகத்துடன், உற்சவ மூர்த்திகளுக்கு நடைபெறும் வசந்தமண்டபப் பூசை, 'துவஜஸ்தம்பம்' என்ற கொடிமரத்துக்கு நடைபெறும் பூசைபோன்றவை முக்கியமானவை. இவை நடைபெறும்போது அவற்றை நாம் தரிசிக்கவேண்டும். இறைவனின் அலங்காரத்தை மனத்திருத்தி ஆராதிக்கவேண்டும். தீபாராதனைகளைக் கண்குளிரக் கண்டு இன்புறவேண்டும். ஆனால் நடப்பது என்ன?

கோயிலுக்குப் போனவுடனேயே எல்லா மூர்த்திகளையும் வழிபடவேண்டும், வலம்வரவேண்டும் என்றே பலரும் கருதுகிறார்கள். அந்த நினைவால், என்ன பூசை நடந்தாலும், என்ன அபிடேகம் நடந்தாலும் அதைப் பார்த்துத் தரிசிப்பதை விடுத்து வலம் வருவதிலேயே கவனம் செலுத்துகிறார்கள். இதனால் இரண்டு தவறுகள் நடக்கின்றன. ஒன்று, விசேடமாக நடைபெறும் அபிடேகத்தையோ, பூசையையோ அவர்கள் தரிசிக்கத் தவறுகிறார்கள். இரண்டாவது, தரிசிக்கும் மற்றவர்களுக்கு இடையூறு விளைக்கும் வகையிற் கோயிலைச் சுற்றி வலம்வருகிறார்கள். அபிடேகம் நடக்கும்பொழுது கோயிலை வலம்வருவதே முதலிற் தவறு. அபிடேகத்துக்கு முன்னும், அபிடேகம் முடிந்து அலங்காரம் செய்யும்பொழுதும் திரைபோட்டிருப்பார்கள். அப்படித் திரை போட்டிருக்கும்பொழுது வழிபடுவதும் தவறு. தாமும் தவறுசெய்து, அமைதியாக நின்று வழிபட விரும்பும் பத்தர்களுக்கு ஊறுசெய்வதும் தவறல்லவா? கோயிலை வலம்வருதானால், பூசைகள் எல்லாம் முடிந்தபின்னரே வலம் வருவது முறையாகும். சுயநலம், கட்டுப்பாடின்மை, பேராசை, பொறுமையின்மை போன்ற குணங்களைக் குறைப்பதற்காகவே நாம் கோயில் வழிபாட்டுக்குப் போகிறோம். அதைக் கருத்திற் கொள்ளாது, நாம் வழிபட்டாற் போதும், நாம் பார்த்தாற் போதும் என்று நினைப்பது தவறல்லவா? இதை அடியார்கள் தம் மனத்திலே கொள்ளவேண்டும். **குளிக்கப்போய்ச் சேறு பூசலாமா?**

க.ஜெகதீஸ்வரன்
ஆசிரியர்

**கலசம்**
**நிருவாகக் குழு**

**ஆசிரியர்**
க ஜெகதீஸ்வரன்

**உதவி ஆசிரியர்கள்**
வை சிவனருட்செல்வர்
சி அற்புதானந்தன்

**வெளியீடு**
வை சிவனருட்செல்வர்

**விளம்பரம் தொடர்புகள்**
மா இந்துசேகரன்
சி தம்பு

**நிருவாகம்**
வ இ இராமநாதன்

**முகவரி**
SMS
2 Salisbury Road
Manor Park
London E12 6AB

Tel/ Fax:
020 8514 4732

**மின்னஞ்சல்**
email:
smsukkalasam@gmail.com

# இந்த இதழில்


பண்டை இலக்கியமும் பண்பான வாழ்க்கையும் 03

மஹாராஷ்டிரா - திரியம்பகம் பயணக்கட்டுரை 10

சகலகலாவல்லியே (நவராத்திரி கட்டுரை) 14

நர்த்தன நடராஜர் 18

ஸ்ரீ சிதம்பரேஸ்வரர் சந்நிதி விசேட தினங்கள் 29

சைவ சமயப் பரீட்சை 30

மூர்த்தி நாயனார் 32

திருமுறையிலே...... 36

கண்ணனும் தாத்தாவும் 38

Hinduism in search of Answers 43

நீர்நிலைகளும் கடவுள் சிலைகளும் 48


அட்டைப்படம்: கூகிள் மின்னம்பலம்


*R. Pathmanaba Iyer*
*27-B, High Street,*
*Plaistow*
*London E13 0AD*

# பண்டை இலக்கியமும் பண்பான வாழ்க்கையும்

-திருமதி தனலட்சுமி குலசேகரம்

தற்கால உலகில் மனிதனால் வெளிக்காட்டப்படும் இயல்புகளாகிய பதவிமோகம், பொருளாசை, போட்டிமனப்பாங்கு போன்றவற்றாற் கொடிய யுத்தங்களும் சோகங்களும் மலிந்து கிடக்கின்றன. இவ்வேளையில் நாம் பண்டைய நூல்களைப் புரட்டிப் பார்ப்போமானால், மனித வாழ்க்கையில் எவ்வளவு பண்பாடு, ஒழுங்கமைப்பு, மன அமைதி, அன்பு, இன்பம், ஒற்றுமை, ஆரவாரமற்ற அமைதியான தெய்வ வணக்கம் என்பன அக்காலங்களில் சிறப்புடன் திகழ்ந்தனவென்பதைக் காணக்கூடியதாக உள்ளது.

சங்ககாலம், சங்கம் மருவிய காலம் என்று கி.மு. பல வருடங்களுக்கு முற்பட்ட காலத்தில் ஆக்கப்பட்ட நூல்கள் அவற்றைத் துல்லியப்படுத்துகின்றன. அந்நூல்களில் சில அகநானூறு, புறநானூறு, குறுந்தொகை, தொல்காப்பியம், சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி, பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க்கணக்கு, நற்றிணை, கலித்தொகை, பரிபாடல், கலிங்கத்துப்பரணி, நளவெண்பா, ஐங்குநுறூறு. திரிகடுகம், திருவருட்பா என்பனவாகும்.
சில எடுத்துக்காட்டுதல்களை இங்கே பார்ப்போம்.

**அன்பின் சிறப்பு:**
குடும்ப வாழ்க்கையில் அன்பிற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது என்பதை, சங்கப்புலவர் கூடலூர்க்கிழார் காட்டும் ஒரு குடும்பக்காட்சி:

“முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்
கழுவுறு கலிங்கம் கழாஅது உடீஇக்
குவளை உண்கண் குய்ப்புகை கமழத்
தான் உழந்து அட்ட தீம்புளிப்பாகர்
இனிது எனக் கணவன் உண்டலின்
நுண்ணிதின் மகிழ்தன்று ஒண்ணுதல் முகனே”
- குறுந்தொகை

புக்ககத்தில், கணவனுக்காகத் தானே விரும்பித் தயிர்க்குழம்பு தயாரிக்க, அடுப்பில் நெருப்பு வளர்க்க ஊதுகுழலால் ஊதினாள். கண்களில் புகைமேகம் மண்டியது. குவளைமலர்க் கண்களைக் கசக்கினாள். கணவன் இனிது இனிது என ருசித்துச் சாப்பிட்ட காட்சியில் அவள் உள்ளம் மகிழ்ந்து சமையலறைச் சிரமங்கள் எல்லாம் சந்தோஷ அருவியாய் அவளுடைய விழிகளில் வழிந்தன. இதில் அன்புமயமான குடும்ப வாழ்க்கை முகம் காட்டுகிறது.
உடலுக்கும் உயிருக்கும் உள்ள உறவுதான் கணவன் மனைவி உறவு என்கிறார் வள்ளுவர்.

“உடம்பொடு உயிரிடை என்ன மற்றன்ன
மடந்தையொடு எம்மிடை நட்பு” குறள் 1122

மேலும் சங்கத் தமிழரின் வாழ்க்கைச் சிறப்பை 2381 சங்கப் பாடல்கள் விதம் விதமாய் விளக்குகின்றன. வாழ்க்கையின் அழகுகளை, வாழ்வியல் அறங்களைச் சங்கப்பாடல்கள் சிறப்பாகச் சாற்றுகின்றன.

சக மனிதனுக்கு இரங்காத சமூக மனிதர்கள் நாம். சங்ககாலத் தமிழன் தோகை விரித்த மயிலுக்கும் இரங்கினான்; துவண்டு விழுந்த கொடிமலருக்கும் இரங்கினான்; வண்ணமலரில் வாசஞ்செய்த வண்டுக்கும் இரங்கினான் என்கிறது வரலாறு.

கருமேகம் திரண்டதில் மகிழ்வெய்தித் தோகைவிரித்து மேனி சிலிர்த்த மயில், கடுங்குளிரில் நடுங்கியதாய் நினைத்து தன்னுடைய போர்வையைப் போர்த்திப் பரவசமுற்றான் பேகன்.

**"மடத்தகை மாமயில் பனிக்கும் என்றருளிப்**
**படாஅம் ஈத்த கெடாஅ நல்லிசைக்**
**கடாஅ யானைக் கலிமான பேக"**

**புறநானூறு - 145**

மண்ணில் விழுந்து வாடிக்கிடந்த முல்லைக்கொடிக்கு, தன்னுடைய தேரையே கொழுகொம்பாக்கி, அதனுடைய துயரத்தைத் தீர்த்ததாய் நினைத்து நெகிழ்ந்தவன் பாரி.

**"ஊருடன் இரவலர்க்கு அருளித் தேருடன்**
**முல்லைக்கு ஈத்த செல்லா நல்லிசை**
**படுமணியானைப் பறம்பின் கோமான் நெடுமாப் பாரி"**

**புறநானூறு - 201**

மரங்களும் கொடிகளும் மலர்களும் சூழ்ந்த சோலை வழியே தேரைச் செலுத்தி வந்த தலைவன், மலரொன்றைப் பஞ்சணையாக்கி இரண்டு வண்டுகள் இன்புறுவதைக் கண்டான். அழகிய தேரை அலங்கரிக்கும் மணியின் நாவசைந்து எழும் ஒலியில், கூடிக் கலந்த வண்டுகள் கூடல் கலைந்து பதறித் துடிக்கும் என்று பதைபதைத்தவன், ஓடும் தேரில் ஓசை எழுப்பிய நாவைக் கயிற்றால் கட்டினான்.

**"பூத்த பொங்கர்த் துணையுடன் வதிந்த**
**தாதுண் பறவை பேதுற லஞ்சி**
**மணிநா வார்த்த மாண்வினைத் தேரன்"**

**அகநானூறு - 40**

இவர்களுடைய இதயங்களை ஈரப்படுத்தியது இன்னொரு உயிரின் துயரைத் துடைக்கும் அன்பும் அருளுமே!

**மனிதநேயம்:**

பிறர்பால் ஊற்றெடுக்கும் கைம்மாறு கருதாத உண்மையான அன்பு, அடுத்தவர் துன்பத்தை தீர்க்கத் துடிக்கும் அருட்கருணை, பகைவனிடத்தும் வெறுப்பின் நிழல் படியாத பாசம், தன்னுயிர்போல் எல்லா உயிர்களையும் பாவிக்கும் பண்பு, நலம் ஆகிய இவற்றின் சங்கமத்தில் பிறப்பதுதான் மனிதநேயம்.

அன்பு சார்ந்த அந்த ஒருமையுணர்வுதான் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே உலகப் பொதுமைப்பாட்டில் பதிவு செய்யப் புறநானூற்றுப் புலவனைத் தூண்டியது.

**"யாதும் ஊரே யாவரும் கேளிர்"**
**"தீதும் நன்றும் பிறர் தர வாரா"**
**"ஒன்றே குலம் ஒருவனே தேவன்"**

என்ற புறப்பாடல்கள் சமயங்களின் சாரத்தையும் பொதுமை உணர்வின் வளர்ச்சிப் போக்கையும் அழுத்தமாக எடுத்துரைக்கின்றன.

**"அன்பிருக்கும் இதயமே ஆண்டவன் இருக்கும் ஆலயம்"**
**"அன்பே ஆண்டவன் என்று உணர்தலே உண்மையான ஞானம்"**
**"அன்பையும் ஆண்டவனையும் வேறு வேறாகப் பிரித்துப் பார்ப்பது அஞ்ஞானம்"**
**"அன்பு வேற்றுமையில் ஒற்றுமை காணும்"**
**"அன்பற்ற இதயம் ஒற்றுமையில் வேற்றுமையைத் தேடும்"**

**"அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்**
**அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்**
**அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்**
**அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே"**

என்ற திருமூலரின் திருமந்திரத்தைவிட வலிமையாக அன்பு பற்றி யார் பேசிவிட முடியும்.

நளமகாராசனின் செங்கோலாட்சியைப் புகழேந்திப்புலவர் வர்ணிக்கும் விதம் எம்மனதை அவ்வாறான ஒரு அமைதி நிலைக்கு கொண்டுசெல்கிறது

**சீத மதிக்குடைக்கீழ்ச் செம்மை அறங்கிடப்பத்**
**தாதவிழ்பூந் தாரான் தனிக்காத்தான் - மாதர்**
**அருகூட்டும் பைங்கிளியும் ஆடற் பருந்தும்**
**ஒருகூட்டில் வாழ உலகு**

**நளவெண்பா 24**

குளிர் நிலவுபோன்ற வெண்கொற்றைக் குடைநிழலின் கீழ், மாதர் அருகில் வைத்து ஊட்டும் பைங்கிளியும், அதற்கு எதிரான பருந்தும் ஒரு கூட்டில் வாழக்கூடிய அமைதியான சூழ்நிலை அங்கே காணப்படுகிறது.

சங்ககாலம் தமிழ் இனத்தின் பொற்காலம் எனப்போற்றப்படுகிறது.

**"பசி இல்லாகுக; பிணிசேர் நீங்குக; வேந்து பகை தணிக; ஆண்டு பல நந்துக; அல்லது கெடுக"**

என்னும் ஐங்குறுநூறு காட்டும் தலைவியின் பண்பாட்டுப் பார்வை நம் ஆழ்ந்த சிந்தனைக்குரியது. இவை பண்டைத்தமிழரின் வாழ்வியற் கொள்கைகளாகும்.

அளவுக்கதிகமாக செல்வத்தைச் சேர்த்துவைத்து, அடுத்தவர்க்கு உதவாமலும் தானும் அநுபவியாமலும் பூட்டி வைத்து மகிழ்பவர்பற்றி பழமொழி நானூறு இவ்வாறு கூறுகிறது.

**"வழங்கலும் துய்த்தலும் தேற்றாதான் பெற்ற**
**முழங்கு முரகடைச் செல்வம் - தழங்கருவி**
**வேய்முற்றி முத்துதிரும் வெற்ப! அதுவன்றோ**
**நாய்பெற்ற தெங்கம் பழம்"**

நாய் தேங்காயை உடைத்துத் தின்னவும் முடியாது. அடுத்தவனை அது தின்னவும் விடாது.

சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நான்கு நெறிகளையும் தெளிந்த தமிழில் தந்த சித்தர் திருமூலர் அருளிச்செய்த திருமந்திரத்தில் ஒரு மந்திரம்:

படமாடக் கோயில் பகவற்கொன் றீயின்
நடமாடக் கோயில் நம்பற்கங் காகா
நடமாடக் கோயில் நம்பற்கொன் றீயின்
படமாடக் கோயில் பகவற்க தாமே!

திருமந்திரம்

சித்திரங்களும் ஓவியங்களும் அமைந்த மாடங்களுடைய கோயிலில் இருக்கும் இறைவனுக்கு நாம் ஒரு பொருளைக் காணிக்கையாகச் செய்தால் அது நடமாடும் உடம்பான கூடத்தில் வாழும் இறைவனுக்கு ஒப்பான ஏழைகளைச் சாராது. ஆனால் நடமாடும் ஏழையற்கு நாம் ஒன்று கொடுத்தால் அது படமாடும் மாடக்கோயிலில் இருக்கும் இறைவனைச் சாரும்.

சக மனிதனைப் பற்றிய சிந்தனை சிறிதுமின்றிச் தன்னலத்துடன் தன்குடும்பம், தன் மனைவி மக்கள் மட்டுமே என்று வாழும் மனிதர்களின் சமூகமே நரகத்தைவிட மோசமானது. அடுத்தவர்க்கு உதவும் அன்பு சார்ந்த வாழ்வை நான்கு வரிகளில் திருமந்திரம் அழகாகச் சொல்கிறது.

“யாவர்க்குமாம் இறைவர்க்கு ஒரு பச்சிலை
யாவர்க்குமாம் பசுவுக்கு ஒரு வாயுறை
யாவர்க்குமாம் உண்ணும்போது ஒரு கைப்பிடி
யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரைதானே”

திருமந்திரம்

இறைவனுக்கு விதம்விதமாய் அபிஷேக ஆராதனைகள் தேவையில்லை. அன்புடன் ஒரு பச்சிலையை அர்ப்பணித்தாலே போதும். பசுவிற்கு ஒருவாய் கொடுத்தல் யாவர்க்கும் முடியக்கூடியதே. இங்கே ‘பசு’ என்பது குறியீடு - வாயில்லாச் சீவன்கள் என்பனவற்றைக் குறிக்கும். பசி என்று வரும் ஏழைகட்கு ஒருபிடி உணவிட்டு அதன்பின் நாம் உண்ண வேண்டும். பிறரிடம் இதயம் மகிழ இனிய மொழி பேசவேண்டும்.

**மதங்கள் பற்றி:**

கடவுள் வணக்கம், மதங்கள் என்பன பரந்த மனப்பாங்குடனேயே அநுட்டிக்கப்பட்டன. மனித வாழ்க்கையில் அமைதியே மதங்களின் முதன்மையான நோக்கம் ஆகும். மரணபயம், மறுபிறப்பு, நரகம், சொர்க்கம், ஊழ்வினை, வினைப்பயன் என்றெல்லாம் மதம் மனிதனை அச்சுறுத்துவதன் அடிப்படை இலக்கு மனிதனின் அளவற்ற ஆசைகளை நெறிப்படுத்துவது தான்.

அழியும் இன்பங்களில் ஆழ்ந்திக் கிடக்கும் மனித இனத்தை அழியாத பேரின்பத்தில் ஆழ்த்துவதற்காக உருவெடுத்ததுதான் மதம். மனிதனை அறியாமை சூழ்ந்த அஞ்ஞானத்தில் இருந்து விடுவித்துப் பரம்பொருளைப்பற்றிய மெய்ஞ்ஞானத்திற்கு வழிப்படுத்துவதுதான் மதம்.

உணர்ந்து தெளிவதுதான் மெய்ஞ்ஞானம்.

மனிதனை நெறிப்படுத்துவதற்காகப் பிறந்த மதத்தின் ஆணிவேர் இறைவன். எந்த ஒன்றில் இருந்து இந்தப் பிரபஞ்சத்தில் உயிருள்ள உயிரற்ற பொருள்கள் தோன்றினவோ, எதை ஆதாரமாகக் கொண்டு வாழ்கின்றனவோ அதுவே "பிரம்மம்" என்கிறது உபநிடதம்.

உணர்வுள்ள சேதனப் பொருள்களுக்கும் உணர்வற்ற பிரகிருதிப் பொருள்களுக்கும் பின்னால் ஒரு மூலாதாரமான ஆற்றல், அதுதான் பிரம்மம் என்கிறது கேனோபநிடதம்.

உலகத்தின் அனைத்துப் பொருள்களின் ஒருமித்த இயக்கத்தை எந்தச் சக்தி ஆட்டுவிக்கிறதோ அந்தச் சக்தியே பிரம்மம் என்கிறது கடோபநிடதம்.

பரம்பொருள் ஒளிமயமானது. அது உருவமற்றது என்கிறது "திவ்யோ ஹ்யமூர்த்த"என்கிறது முண்டக உபநிடதம்.

"அண்டசராசரங்களுக்கும் ஆதாரமான பிரம்மம் அகவுணர்வாக உள்ளது" என்று அழுத்தமாகச் சொல்கிறது ஐத்திரேய உபநிடதம்.

மெய்யுணர்வு, இறையுணர்வு, உள்ளத்தால் உணரப்படும் சத்தியே பரப்பிரமம். இதைத் தெளிவுபடுத்துவதற்குத்தான்,

**'உள்ளத்தின் உள்ளே உணரும் ஒருவனை'** என்கிறது திருமந்திரம்.

**'உடையாய் போற்றி உணர்வே போற்றி'** என்கிறது திருவாசகம்.

**'உணர்விலே நின்ற ஒன்றை உணர்ந்தேனே'** என்று உருகியது திருவாய்மொழி.

**'உணர்வாகி அடியேனது உள்ளே நின்ற தேனமுதே'** என்று தெளிந்தது தேவாரம்.

**ஆய்ந்த உணர்வின் உணர்வே'** என்றான் கம்பன்.

**'உள்ளொளியே! உள்ளத்து உணர்வே!'** என்றார் வள்ளலார்.

**'பிரம்மமும் நாமும் வேறு வேறல்ல'** என்று விளக்குகிறது வேதாந்தம்.

**'கடவுள் உனக்குள் இருக்கிறார்'** என்று உபதேசிக்கிறது உபநிடதம்.

**'பார்க்கும் உயிர்களெல்லாம் தெய்வமன்றிப் பிறிதொன்றில்லை'** என்று பாடுகிறான் பாரதி.

உயிர்கள் அனைத்தும் தெய்வமென்றால் வாழும் உயிர்களிடையே உயர்வு, தாழ்வு இல்லையென்று பொருள்.

**'உளன் கண்டாய் நன்நெஞ்சே உத்தமன்'** என்றும்
**'உளன் கண்டாய் உள்ளுவார் உள்ளத்து'** என்கிறார் பொய்கையாழ்வார்.

**'நினைப்பவர் மனம் கோயிலாக் கொண்டவன்'** என்கிறார் அப்பர்.

அப்படியானால் உள்ளந்தான் கோயில். அதுதான் ஆண்டவன் வாழும் ஆலயம். அந்த உள்ளம் எப்படி இருக்கவேண்டும்?

ஆணவமும், அகங்காரமும், பேராசையும், பகைமையும் எரிக்கப்படும் சுடலையாக இதயம் இருந்தால், அங்கே இறைவனின் திருநடனம் அன்றாடம் நடக்கும். "வெள்ள முள்ள விரிசடை நந்தியைக் கள்ளமுள்ள மனத்தவர் காண்கிலர்" என்கிறார் அப்பர்.

ஒரு சமயத்தைச் சார்ந்தவர்ககள் பிற சமயங்களைப் பழிக்கும் பண்பு சங்ககாலச் சமுதாயத்தில் காணப்படவில்லை. ஒரு சமயத்தவர் மற்றச் சமயக் கடவுளரையும் வழிபடும் போக்கையே நாம் பண்டைத் தமிழர் வாழ்வில் சந்திக்கிறோம்.

தொல்காப்பியர் காலத்தில் தமிழரிடையே பல தெய்வ வழிபாடு இருந்திருக்கிறது. முல்லை நிலத்தில் திருமாலும், குறிஞ்சி நிலத்தில் குமரனும், மருதநிலத்தில் இந்திரனும், மணல் விரிந்த நெய்தல் நிலத்தில் வருணனும் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே வழிபடு தெய்வங்களாக விளங்கியதை,

**"மாயோன் மேய காடுறை உலகமும்**
**சேயோன் மேய மைவரை உலகமும்**
**வேந்தன் மேய தீம்புனல் உலகமும்**
**வருணன் மேய பெருமணல் உலகமும்"**

என்று தொல்காப்பிய சூத்திரம் தெரிவிக்கிறது.

தொல்காப்பியம் வைதீகச் சமயக் கோட்பாடுகளையும், சமணசமயக் கொள்கைகளையும் பலவிடங்களில் விரிவாகப் பேசுகிறது. எந்தவொரு சமயத்தையும் இழித்தும் பழித்தும் பேசவில்லை. சங்கப் புலவர்களின் பாடல்களைக் கொண்டு அவர்களுடைய சமயத்தை இனங்காண இயலாது.

**தீயினுள் தெறல் நீ பூவினுள் நாற்றம் நீ**
**கல்லினுள் மணியும் நீ சொல்லினுள் வாய்மை நீ**
**அறத்தினுள் அன்பு நீ மறத்தினுள் மைந்து நீ**
**வேதத்து மறை நீ பூதத்து முதலும் நீ**
**வெஞ்சுடர் ஒளியும் நீ திங்களில் அளியும் நீ**
**அனைத்தும் நீ அனைத்திலும் பொருளும் நீ**

என்று திருமாலைப் போற்றிப் பரிபாடலில் பாடும் கடுவன் இளவெயிலனார் 'நீயே வரம்பிற்றிவ்வுலகம்' என்று முருகனைச் சிறப்பிக்கிறார்.

சிலப்பதிகாரம் தோன்றிய காலத்தில் சைவம், வைணவம், பௌத்தம், சமணம் போன்ற சமயங்களை மக்கள் சார்ந்து நின்றனர். எல்லாச்சமயங்களையும் பேதமின்றி இளங்கோ அடிகள் பெருமை பொங்கப் புகழ்ந்து பேசுவதை பார்க்கிறோம்.
காவிரிப்பூம் பட்டினத்தில்:

**"பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்
அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும்
வால்வளை மேனி வாலியோன் கோயிலும்
மாலை வெண்குடை மன்னவன் கோயிலும்"**

இருந்ததாகக் குறிப்படும் இளங்கோ அடிகளின் சமயப் பொதுமை வெள்ளிடை.

பண்டைய இலக்கியங்கள் ஏராளம் உள்ளன. அவை படிக்கப்படிக்க இனிமை தருபவை. உணர்ச்சியின் வெளிப்பாடாகமட்டும் இல்லாமல், அறிவின் புலப்பாடாகவும், அறத்தின் பயன்பாடாகவும் அமைந்துள்ளன. மனிதவாழ்வுடன் தொடர்புள்ளதால் இவ்விலக்கியங்கள் எல்லாக் காலங்களிலும் நிலைத்து நிற்க முடிகிறது.

**"ஒத்தாரும் உயர்ந்தாரும் தாழ்ந்தாரும் எவரும்
ஒருமை உளராகி உலகியல் நடத்த வேண்டும்"**

என்ற வள்ளலாரின் கனவை நனவாக்கும் வகையில் சிறந்ததோர் சமூகம் செதுக்கப்பட வேண்டும்.

# கலசம் 80

கலசம் சஞ்சிகையின் 80ஆவது இதழ் 2016ஆம் ஆண்டு ஜனவரி மாதம் பொங்கலன்று வெளிவருகிறது. அந்த மைல் கல்லைக் கலசம் சஞ்சிகை தாண்டுவதை நினைவுகூரும் வகையில் யாழ்ப்பாணத்தில், வடமராட்சி கிழக்கில், அங்குள்ள மாணவர் நலன்பெறவென நாலு பாடசாலை நூல்நிலையங்களுக்கு நூல்களை வழங்க முடிவுசெய்யப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றோம்.

## பயனுறும் பாடசாலைகள்:

வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயம்
உடுத்துறை மகாவித்தியாலயம்
ஆழியவளை சி சி த க வித்தியாலயம்
செம்பியன்பற்று அ த க பாடசாலை, தாளையடி

ஆசிரியர்
கலசம் நிருவாகக் குழு சார்பில்

# மஹாராஷ்டிரம்

- பயணக்கட்டுரை

சாவகச்சேரியூர் Dr க. கதிர்காமநாதன்

## திரியம்பகம்



திரி - மூன்று, அம்பகம் - இடம் மூன்று கண்கள் உடைய சிவனின் இடம். மும்மூர்த்திகளும் - ஈசன், விஷ்ணு, பிரம்மா ஒன்றாக ஆவுடையாரில் உள்ள தலமெனவும் குறிக்கும். இதைவிட, காயத்திரி, சாவித்திரி, சரசுவதி ஆகிய மூன்று தேவியரும் இங்கு உள்ளதால், திரியம்பகம் எனவும் கூறப்படுகிறது.

மஹாராஷ்டிரத்தின் வடபகுதியிலுள்ள நாசிக் என்னும் இடத்தில் இத்தலம் உள்ளது. 'நாசிகா' என்றால் வடமொழியில் மூக்காகும். நாசிகா 'நாசிக்' ஆகிவிட்டது. நாசிக் எனும் இடத்திற்கு ஒரு சுவாரசியமான கதையுண்டு. சூர்ப்பனகை அழகிய பெண்ணாக உருவெடுத்து, இராமர் மீது காதல் கொண்டாள். அவளின் தகாத நடத்தையைக் கண்ணுற்ற இலட்சுமணன் கோபங்கொண்டு சூர்ப்பனகையின் மூக்கைத் துண்டித்தான். அந்த இடம் இதுவானதால் 'நாசிக்' எனப் பெயர்பெற்றது என்றும் சொல்வர். பிரம்மகிரி மலையின் அடிவாரத்திலே இக்கோயில் இருப்பதால் பிரம்மகிரி எனவும் அழைக்கின்றனர்.

இறைவன்: திரியம்பகேசுவரர்.
இறைவி: ஜடேசுவரி

திரியம்பகேசுவரர் என்றால் மும்மூர்த்திகளுக்குத் தலைவன் என்று பொருள்.
இறைவன் - ஈஸ்வரன், ஈசன் முதல்வன்

மூவர் நின்றேத்த ஆதிமூர்த்திகட்கு அருள்புரிந்தருளிய
தேவதேவன் மூவர் கோனாய் நின்ற முதல்வன்

- மாணிக்கவாசகர்

**பயணம்:**

காலை நாலுமணிக்கு மும்பாயிலிருந்து காரிலே சென்று மதியம்போல் திரியம்பகத்தை அடைந்தோம். அன்று, புரட்டாதி மாத முதற் சனி நாளுமாகும். மழை பெய்துகொண்டே இருந்தது.

கோயிலுக்குச் சமீபத்தில் புல்லும் மலர்மாலையும் வாங்கினோம். புல்லை முதலில் அங்கு நின்ற பசுவுக்குக் கொடுத்தோம். வேறொரு கோயிலிலும் நாங்கள் புல் வாங்கியதில்லை. கௌதம முனிவர் புல்லால் ஒரு மாயப் பசுவை விரட்டிய காரணமோ தெரியாது, இங்கே பசுவுக்குப் புல் கொடுக்கும் வழக்கம் இருக்கிறது.

கறுத்த நிறத்தில், கருங்கல்லாற் கட்டியெழுப்பப்பட்ட உயர்ந்த கோபுரம். தென்னாட்டுக் கோயில்கள் போன்ற தோற்றம். கோபுரத்தின் உச்சியில் தங்கக் கலசமும், சிவனின் சூலமும் உள்ளன. அருகிலே கொடியும் பறக்கிறது.

கோயிலின் உள்ளே செல்லுமுன் கமரா, கைப் பைகள் யாவும் வைத்துவிட்டுத்தான் செல்ல வேண்டும். அவற்றைப் பாதுகாப்பாக வைத்துவிட்டுப்போ இடமும் உண்டு.

கோயில் அருகில் ஒரே கூட்டம். நீண்ட வரிசையில் மக்கள். மழையும் பெய்கிறது. மொழியும் தெரியாது. எப்படி உள்ளே செல்வது, தரிப்பது என்று நாம் தடுமாறியபோது, அரனைப்போல் ஓர் அந்தணர் எம்மிடம் வந்தார். 250 ரூபா கொடுத்தால் உள்ளே அழைத்துச் செல்வேன்; தரிசிக்கலாம் என்றார். என்னே ஆறுதல்!

கோயிலின் நான்கு பக்கமும் கோட்டை மதில்போற் சுவரும் வாசல்களும் உள்ளன. அருமையான சிற்பவேலைகள் கொண்ட தலமாகும்.

சிவாசாரியார் எமைக் கோயிலின் மிக அருகிற்கு அழைத்து, இருத்தி சங்கற்பம் செய்தார். பின் உள்ளே அழைத்துச் சென்றார்.

மேற்கு வாசலில் கர்ப்பக்கிருக வாயிற்படி உள்ளது. இதனூடாகக் கீழே சென்று உள்ளே நுழையவேண்டும். நடுவில் ஆவுடையார் தரை மட்டத்திலே காட்சியளிக்கின்றார். மூன்று ரோஜா மொட்டுக்கள் போல இலிங்கத்தில் உள்ளன. இவை மும்மூர்த்திகளைக் குறிக்கும். இவற்றின் நடுவே நீர் சுரந்துகொண்டே இருந்தது. நீரை அந்தணரொருவர் அடிக்கடி எடுத்து இறைத்துக்கொண்டிருந்தார்.

ஏனையோர் வரிசையில் நிற்க, மற்றோர் கோஷமிட்டுச் சிவனைத் துதிக்க, அந்தணர் எமை உள்ளே அழைத்துச் சென்று இலிங்கத்தின்மீது அபிஷேகம் நீராற் செய்து, பூவால் அர்ச்சித்தார். கீழே இருந்த இலிங்கத்தை மிக நன்றாகப் பார்த்து நாம் தரிசிக்க முடிந்தது. இதைத்தான் பணம் பாதாளம்வரை செல்லுமென்று கூறினார்கள் போலும். நேர அவகாசம் இன்மையாலும் எமது இயலாமையாலும் தொடரந்து பயணம் செய்யவேண்டியதாலும் இப்படி நாம் செய்தோம். தென்னாட்டு முறை இங்கு கைக்கொள்ளப்படுவதால், ஏனைய வட நாட்டுக்கோயில்கள் போன்று விக்கிரகத்தைத் தொட்டு, நீர் வார்த்து, பூ வைத்து நாம் வணங்க முடியாது.

பன்னிரண்டு ஜோதி இலிங்கத்தில், திரியம்பகேசுவரர் இலிங்கமும் ஒன்று. இந்த ஒரு இலிங்கம் மாத்திரம் மும்மூர்த்திகளைக் கொண்டுள்ளது. மேலும், புண்ணிய நதியான கோதாவரியோடு இருப்பதாலும், மகாமிருத்யுஞ்சய மந்திரத்தோடு சம்பந்தப்பட்டதாலும் கீர்த்தியும், சனநெருக்கடியுங் கொண்ட புகழ்பெற்ற ஜோதிலிங்கம் இது.

பரிவார மூர்த்திகளாக விநாயகர், விஷ்ணு, பிரம்மா, கிருஷ்ணர், பலராமர், இராமர், கங்கா தேவி, கோதாவரி அம்மாள் ஆகிய மூர்த்தங்கள் இருக்கின்றன. கோயிலின் பின்பக்கத்திலேதான் சிறிது

தூரத்தில், புனித குளம் உண்டு. இங்குதான் நாம் முதலிற்சென்று கைகால் அலம்பி வணங்கி-னோம். கும்பகோணம் விசுவநாதர் கோயிற் குளம்போன்று இங்கும் இக்குளத்தில் 12 ஆண்டுகளுக்கொருமுறை 'கும்பமேளா' கொண்டாடுவது குறிப்பிடத்தக்கது.

இக்கோயிலை எக்காலமும் தரிசிக்கலாம். 'நாசிக்' புகைரத நிலையத்தின் சமீபத்தில் இந்தக் கோயில் உள்ளது. விமான மார்க்கமாகவும் அடையலாம். பேருந்துச் சேவை வசதியும் உள்ளது.

**கோதாவரி நதி:**

ஏழு புண்ணிய நதிகளில் இதுவும் ஒன்றாகும். கங்கை, யமுனை, சரஸ்வதி, நர்மதா, சிந்து, காவேரி ஆகியவை ஏனைய ஆறு நதிகளாகும். கங்கை காசியில் பாவத்தைப் போக்குவதுபோல் கோதாவரி இங்கு நீக்குகிறது. இங்குள்ளோர் கோதாவரியை கங்கையாகவே கருதுகின்றனர். பகீரதன் தவத்தால் பகீரதி (கங்கை)யைக் கொண்டுவந்தது போன்று, கோதாவரி நதியைக் கௌதம ரிஷி தன் தவபலத்தால் கௌதமியாகத் தோற்றுவித்தார். கோதாவரி நதி பிரம்மகிரியில் உற்பத்தியாகி கோயிலின் முன் தீர்த்தமாகி மஹாராஷ்டிரா, ஆந்திரப்பிரதேசங்கள் வழியே சென்று வங்கா விரிகுடாவில் விழுகிறது. கங்கை நதிக்கு அடுத்த இரண்டாவது இடத்தைப்பிடிக்கும் நீள நதி இதுவாகும்.

**மந்திரங்கள்:**

ஒரே வார்த்தையைத் திருப்பித்திருப்பிச் சொன்னால் செபித்தால் அது மந்திரமாகும். சைவசமயம், வைணவசமயம், புத்தசமயம், சமணசமயம், சீக்கிய சமயம் யாவற்றிலும் மந்திரங்கள் உள. இவை மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே இருந்தன. சிலவற்றைப் பழைய குகை களிலே பொறித்திருப்பதைக் காணலாம். சில மந்திரங்கள் ஒரு கருத்தும், பொருளும் இல்லாமல் இருக்கும். ஆனால், செபித்தால் அதற்குச் சத்தியுண்டு.

மந்திரம் = மந்த் + திரம். 'மந்த்' என்றால் நினைப்பது. 'திரம்' என்றாற் காப்பாற்றுவது. ஆகவே மந்திரம் என்றால் நினைப்பவரைக் காப்பாற்றுவது ஆகும். இதையே தமிழிலே கூறினால் 'நீள நினைத்தல்' எனலாம்.

'நீள நினைந்தடியேன் உனை நித்தலுங் கைதொழுவேன்' - சுந்தரர்

ஓம் என்பது பிரணவ மந்திரம். இது மந்திரங்களின் அரசன். மிகச்சத்தி வாய்ந்த மந்திரம் இது. மற்றைய மந்திரங்கள் 'ஓம்' என்று தொடங்கும்போது மிகச் சத்தி பெறுகின்றன.

ஓம் த்ரயம்பகம் யஜாமஹே சுகந்திம் புஷ்டி வர்த்தனம்
உர்வாருக மிவபந்தநாத் ம்ருத்தியோர் மிருக்ஷீய மாமமிருதாத்
- மகாமிருத்தியுஞ்ஜய மந்திரம்

**பொருள்:**

எமைப் போஷித்து, காப்பாற்றும் நறுமணம் கமழும், மூன்று கண்களையுடைய இறைவனைத் தியானிப்போம். ஒரு சுரைக்காய் தானாகவே செடியிலிருந்து விடுபடுவதுபோல எம்மை மரணத்திலிருந்து மோட்சத்துக்கு விடுதலை செய்க!

உயிரை மரணத்திலிருந்து பிழைக்க வைக்கவும் இந்த மந்திரத்துக்குச் சத்தியுண்டு. ஓர் உண்மைச்

சம்பவத்தை இங்கே குறிப்பிடுகிறேன். இது சக்தி விகடன் தீபாவளி சிறப்பிதழ் 28-10-2014இல் பிரசுரமானது.

2001ஆம் ஆண்டு பிரபல கண் மருத்துவர் ஒருவர் மாரடைப்பால் (Massive Heart attack) செயலிழந்து ஆறுமாத காலமாக மருத்துவமனையில் (West Indies) இருந்தார். மருத்துவர்கள் சிகிச்சை பலனளிக்காது என்று கூறிவிட்டனர். அவருடைய நண்பர் வெங்கட்ராமன் ஒரு கனவு கண்டார். 'திருமதி சுரேந்திராவையும் அவருடைய மகள் வந்தனாவையும் தினமும் நீராடி, மடியாக காலை மாலை இருவேளையும் மஹாமிருத்யுஞ்சய மந்திரத்தை பாராயணம் செய்யச் சொல்' என்பது அந்தக் கனவு. அவர்கள் அப்படியே செய்ய, சரியாகப் பத்தாவது நாள் அதிசயிக்கத் தக்கவாறு மருத்துவரின் உடல்நிலை முன்னேற்றம் அடைந்தது. பின்னர் சாதாரண 'வார்டுக்கு' மாற்றப்பட்டு, பூரண குணம் பெற்று 2013 வரை இருந்தார்.

இம் மந்திரத்தை சிவாசாரியார்கள் கோயிலில் செபிப்பதுதான் முறையாகும். சிவானந்த ஆசிரமத்தில் யோகாசன முடிவில் மூன்று முறை இம்மந்திரத்தை ஆசிரியர்கள் செபிப்பர்.

சிவதீட்சை பெற்றவர்கள்தான் மந்திரங்களைச் செபிக்கவேண்டும் என்ற கோட்பாடு ஒன்று உண்டு. ஒலி, உச்சரிப்பு யாவும் சரியாகச் சொல்லாவிடின் விபரீதமாக முடியும். ஆனால் நாமும் எமை யறியாமலே 'ஓம், ஓம்' என ஆமாம் போட்டு, பிரணவசக்தி வாய்ந்த மந்திரத்தைச் சதா சொல்லுகிறோமே!

'மந்திரம் ஓதுவதைக் கேட்டாலே போதும். அருள் கிடைக்கும்' சைவ முன்னேற்றச் சங்கத்தின் அருள்மிகு சிவகாமசுந்தரி சமேத சிதம்பரேஸ்வரர் ஆலயத்தில் 22.06.2015 அன்று அலங்கார உற்சவத்தில் "சிவ வழிபாடு" என்ற தலைப்பில் நடந்த சொற்பொழிவில், ஸ்ரீமகாலட்சுமி நாராயணன் கோயில் பிரதம குருக்கள் இவ்வாறு கூறினார்.

'ஓம் நமசிவாய' ஐந்தெழுத்து மந்திரம் (பஞ்சாட்சரம்)
'ஓம் சரவணபவ' ஆறெழுத்து மந்திரம் (சடாட்சரம்)

## பாடரவம் கேட்ட பகல்

நூற்றனைத்தோர் பல்லூழி நுண்வயிர வெண்குடைக்கீழ்
வீற்றிருந்த செல்வம் விளையாதே - கூற்றுதைத்தான்
ஆடரவக் கச்சா அரைக்கசைத்த பெம்மான்றன்
பாடரவம் கேட்ட பகல்.
ஆடரவம் - ஆடுகின்ற பாம்பு, பாடரவம் - பாட்டின் ஒலி

ஐயடிகள் காடவர்கோன்

### கலசம் 78ஆம் இதழில்...

1. ஒன்பதாம் பக்கத்தில் இலக்குமி தேவி என்ற தலைப்புக்குக் கீழே உள்ள ஆறாவது வரியில், **'இலக்குமி வாசம் செய்யும் விளக்குகளைப் பரிவோடு ஒரு பூவினால் வளர்க்கவேண்டும்'** என்று வந்திருக்கவேண்டும். **'அணைக்க'** என்று தவறாக அச்சாகிவிட்டது. அதே கட்டுரையிலே பதினொராம் பக்கத்தில் வந்த 'சுந்தரி சௌந்தரி' என்ற பாடல் பாரதியார் இயற்றியது.

2. முப்பதாம் பக்கத்தில் யாரும் காணலாம் என்ற கட்டுரையில், 'பால் நினைந்தூட்டும்' என்ற திருவாசகப் பாடலில் 'பரிந்து' என்ற சொல் 'பரிந்நு' என்று அச்சாகிவிட்டது. தவறுகளுக்கு வருந்துகிறோம்.

# சகலகலாவல்லியே

-அநுஜா-



**குமரகுருபர சுவாமிகள் காசியிலே ஒரு மடம் அமைக்க விரும்பினார்கள். ஆனால் அந்த ஊரை ஆண்ட அரசனுடன் பேச மொழி தெரியாது. இருப்பினும் அங்கு சென்று, தன் அறிவுத் திறனால் அரசனின் அபிமானத்தைப் பெற்றார். இவருக்கு அரசன் அளித்த கௌரவத்தைக் கண்ட அரசவைப் புலவர்கள், பொறுக்காது அவதூறு விளைக்க முனைந்தனர். சரசுவதியை மனத்தில் வேண்டி, சகலகலாவல்லி மாலையை ஓதி, மொழிப் புலமை பெற்று அரசனிடம் நிலமும் பெற்று, நினைத்ததைப்போலவே காசியில் மடம் நிறுவினார் குமரகுருபர சுவாமிகள் என்றொரு வரலாறு உண்டு. அப்போது அவர் அருளியதுதான் இந்தச் சகலகலாவல்லி மாலை.**

இந்துக்களின் முக்கியமான பண்டிகைகளில் ஒன்று நவராத்திரி. சத்தியைத் துர்க்கை, இலக்குமி, சரசுவதி என்ற மூன்று வடிவங்களில் வைத்து வணங்குவர். இந்த நாள்களில், எல்லா வீடுகளிலும், ஆலயங்களிலும் சகலாகலாவல்லிமாலையைத் தவறாது பாராயணம் செய்வர். பத்திச்சுவையும் தமிழ்ச்சுவையும் சொட்ட இப்பாடலைப் பாடியவர் குமரகுருபரசுவாமிகள். இப்பாடல்களில் குமரகுருபரர் சரஸ்வதியைத் துதிசெய்து தமக்கு எவையெல்லாம் அருளும்படி வேண்டுகிறார் என்று பார்ப்போம்.

முதலாவது பாடலில், “கலைவாணியே! வெள்ளைத்தாமரை மட்டும்தானா உன் பாதகமலங்களைத் தாங்கும் தகுதிபெற்றவை? எனது தூய உள்ளமாகி இதயத்தாமரை உனது பாதமலர்களைத் தாங்கும் தகுதி பெறவில்லையா?” எனக்கேட்டுத் தன் உள்ளத்தே வந்து அமரும்படி சரஸ்வதியை வேண்டுகின்றார்.

**வெண்டா மரைக்கன்றி நின்பதம் தாங்கவேன் வெள்ளையுள்ளத்**
**தண்டா மரைக்குத் தகாதுகொ லோசக மேழுமளித்**
**துண்டா னுறங்க வொழித்தான்பித் தாகவுண் டாக்கும் வண்ணம்**
**கண்டான் சுவைகொள் கரும்பே சகலகலா வல்லியே**

இரண்டாவது பாடலில், “தாமரை மலரில் விரும்பி எழுந்தருளியிருக்கும், பசுமையான வெண்ணிறமான கொடி போன்றவளே! எவரும் விருப்புடன் படித்து இன்புறக்கூடிய பெரும் நயம் மிகுந்த சொற்சுவை ததும்பும் பலவிதமான கவிதைகளை இயற்றக்கூடிய திருப்பணியை எனக்குக் கொடுத்தருள்வாய்” என்று வேண்டுகிறார்.

**நாடும் பொருட்சுவை சொற்சுவை தோய்தர நாற்கவியும்**
**பாடும் பணியிற் பணித்தருள் வாய்பங்க யாசனத்திற்**
**கூடும் பசும்பொற் கொடியே கனதனக் குன்றுமைம்பாற்**
**காடும் சுமக்குங் கரும்பே சகல கலாவல்லியே**

மூன்றாவது பாடலில், “தெளிந்த நுண்ணிய அறிவும், கற்பனையுமிக்க புலவர்கள் பாடிக்குவிக்கும் கவிதைமழையைக் கண்டு இன்புறும் அழகிய மயில் போன்ற கலைவாணியே! செழுமையான (பத்தி இலக்கியங்கள் நிறைந்த) அமுதத்தமிழ் போன்ற உன் அருட்கடலில் மூழ்கித் திளைத்து மகிழும் வாய்ப்பை எனக்குத் தரமாட்டாயா?” என்று வேண்டுகிறார்.(தமிழின் பெருமை எத்தகையது என இப்பாடல் காட்டுகிறது).

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு தார்ந்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ லோவுளங் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பநுவற் புலவோர் கவிமழை சிந்தக்கண்டு
களிக்குங் கலாப மயிலே சகல கலாவல்லியே

நான்காவது பாடலில், "உனது தொண்டர் நாவில் வீற்றிருந்து, அவர்களைப் பெருமளவு வடமொழி நூல்களையும் இலக்கிய வளம் நிறைந்த தமிழ் நூல்களையும் எழுதவைக்கும் கருணை மிகுந்தவளே! பல நூல்களையும் பெறச்செய்யும் கல்வியையும் எவரையும் கவர்ந்திழுக்கும் இனிய சுவை மிகுந்த வார்த்தைகளைச் சொல்லக்கூடிய அளவிலா ஆற்றலையும் எனக்கு (ஏனைய புலவர்களுக்கெல்லாம் கொடுத்ததுபோல) அருள்வாய்" எனக் குமரகுருபரர் வேண்டுகிறார்.

தூக்கும் பநுவற் றுறைதோய்ந்த கல்வியும் சொற்சுவை தோய்
வாக்கும் பெருகப் பணித்தருள் வாய்வட நூற்கடலுந்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமும் தொண்டர்செந் நாவினின்று
காக்கும் கருணைக் கடலே சகல கலாவல்லியே

ஐந்தாவது பாடலில், "பிரம்மதேவருடைய செம்மையான(சிறந்த) நாவிலும், உள்ளத்திலும், வெள்ளைத்தாமரை மலரிலும் வீற்றிருக்கும் சகலவலாவல்லியே! செம்பஞ்சுக் குழம்பு பூசப்பெற்ற இன்பத்தைத் தருகின்ற உனது திருவடிகளாகிய தாமரைமலர்கள் எனது உள்ளமாகி தடாகத்தில்(குளத்தில்) மலராமல் இருப்பதற்கு என்ன காரணம்?" என்று கேள்வி விடுத்துத் தன்னகத்தே வந்து அமரும்படி வேண்டுகிறார்.

பஞ்சப் பிதந்தரு செய்பொற் பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென் னேநெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்த்தோன் செந்நாவு மகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய் சகல கலாவல்லியே

அடுத்த பாடலில், "வேதப்பொருளிலும், விண்ணிலும், மண்ணிலும், நீரிலும், நெருப்பிலும், காற்றிலும், நின் அடியார் அறிவிலும், உள்ளத்திலும் நிறைந்திருப்பவளே! இசைக்கலையும், நடனக்கலையும், இனிய சொற்கள் நிரம்பிய எல்லாவகை நூல்களையும் நான் நினைக்கும் பொழுதெல்லாம் சுலபமாக பெற்றுக்கொள்ளும்வகையில் எனக்கு அருள்புரிவாயாக" என்று வேண்டுகிறார்.

பண்ணும் பரதமுங் கல்வியுந் தீஞ்சொற் பநுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல் காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங் கனலும்வெங் காலுமன்பர்
கண்ணுங் கருத்து நிறைந்தாய் சகல கலாவல்லியே

ஏழாவது பாடலில், "நின் தொண்டர் உள்ளத்தே அமர்ந்து அமுதம் போன்ற பாடல்களை இயற்றும் ஆற்றலைக் கொடுப்பவளே! அன்னப்பறவை போன்றவளே! எனது உள்ளத்திலும் அமர்ந்து நான் பாடும் பாடலும் அப்பாடலின் பொருளும், அதனுடைய பயனும் உடனே கிடைக்கும் வண்ணம் கடைக்கண்ணருளைத் தந்தருள வேண்டும்" என்று வேண்டுகிறார்.

பாட்டும் பொருளும் பொருளாற் பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல் காயுளங் கொண்டு தொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பா லமுதந் தெளிக்கும் வண்ணங்
காட்டும் வெள்ளோ திமப்பேடே சகல கலாவல்லியே

அடுத்த பாடலில், "செந்தாமரை மலரில் வீற்றிருக்கும் இலக்குமிதேவி அருளும் பொருட்செல்வம் போலன்றி (பொருட்செல்வம் அழியும் தன்மையுடையது) என்றும் அழியாத, நிலையான கல்விச்

செல்வத்தை உடையவளே! என்னுடன் வாதிடுவோரை எனது பேச்சாற்றலால் வெல்லக்கூடிய சொல்வன்மையையும், அட்டாவதான சித்தியையும், கல்வியுள் அடங்கக்கூடிய எல்லா வித்தைகளையும் அடியேனுக்கு அருளி உன் அடிமையாக ஏற்றுக்கொள்" என்று வேண்டு கிறார்.

சொல்விற் பனமு மவதான முங்கல்வி சொல்லவல்ல
நல்வித் தையுந்தந் தடிமைகொள் வாய்நளி நாசனஞ்சேர்
செல்விக் கரிதென் றொருகால முஞ்சிதை யாமைநல்குங்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே சகல கலாவல்லியே

ஒன்பதாவது பாடலில், "நடையழகு மிகுந்த அன்னமும், யானையும் உன்னழகைக் கண்டு உன்னிடம் நடைபயில (கற்க) விரும்புகின்றன. செந்தாமரைப் பாதங்களுடைய கலைவாணியே! சொற்களுக்கும் அவற்றின் பொருள்களுக்கும் உயிராக விளங்கும் மெய்ஞ்ஞான வடிவே! உன்னை யாரால் அறிந்து கொள்ள முடியும். உன் அருளின்றி உன்னை யாராலும் அறிந்து கொள்ள முடியாது. ஆதலால் உன்னை அறியக்கூடிய வல்லமையை எனக்கருள வேண்டும்" என்று மறைமுகமாக வேண்டுகிறார்.

சொற்கும் பொருட்கு முயிராமெய்ஞ் ஞானத்தின் றோற்றமென்ன
நிற்கின் றநின்னை நினைப்பவர்யார் நிலந்தோய் புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ டரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத் தாளே சகல கலாவல்லியே

இறுதிப்பாடலில், "சகலகலாவல்லியே! விண்ணுலகில் படைப்புக் கடவுளாகிய பிரம்மன் முதற்கொண்டு கோடிக்கணக்கான தெய்வங்கள் உள்ளனர். இருந்தாலும் உன்னைப்போல் கண்கண்ட தெய்வம் உள்ளதோ?(நிச்சயமாக இல்லையென்றே கூறுகிறார்). எனவே மண்ணுலகில் வெண்கொற்றக்குடையின் கீழ் வீற்றிருக்கும் மன்னர்கள் யாவரும் எனது பாடலை கேட்ட மாத்திரத்தே அதன் அருமை பெருமையை உணர்ந்து என்னைப் பணிந்து போற்றவேண்டும் (அந்தக் காலத்தில் அரசர்கள் வீரத்தில் மட்டுமல்ல கல்வியிலும் சிறந்து விளங்கினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது) அவ்வளவிற்கு பாடும் திறனை எனக்குக் கொடுத்தருளவேண்டும்" என வேண்டிநிற்பதைக் காணலாம்.

மண்கண்ட வெண்குடைக் கீழாக மேம்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச்செய் வாய்படைப்போன் முதலாம்
விண்கண் டதெய்வம் பல்கோடி யுண்டேனும் விளம்பிலுன்போற்
கண்கண் டதெய்வ முளதோ சகலகலா வல்லியே

சகலகலாவல்லிமாலையில் குமரகுருபரர் சரஸ்வதியை போற்றித் துதித்துத் தன் உள்ளத்தே எழுந்தருளியிருந்து தமக்கு உலகில் கற்கத்தகுந்த கல்வியையும், கலைகள் யாவற்றையும் (அறுபத்துநான்கு) தந்தருளுமாறு வேண்டி நிற்கிறார். ஒருவர் உலகிலுள்ள கல்வி கலைகள் யாவற்றையும் கற்று முடிப்பது அரிது. ஆனால், சரசுவதி கடாட்சத்தால் மட்டுமே அது சாத்தியப்படும் என்று உணர்ந்த குமரகுருபரர் சரசுவதியிடமே வேண்டுகோள் விடுக்கிறார். எனவே நவராத்திரிக் காலங்களில் மட்டுமன்றி ஒவ்வொருநாளும் சகலகலாவல்லிமாலையைப் பாராயணம் செய்வதால், நாமும் கல்வியிலும் கலையிலும் மேன்மையடையலாம். கல்வியும் கலையும் எம்மை விட்டு அகலாது என்றுமே எமக்கு மகிழ்ச்சியையும் அமைதியையும் தரும். நாம் அவற்றைப் பிறருக்கு கற்பிக்கும்போதும், பிறருடன் பகிர்ந்து கொள்ளும்போதும்கூட அவை எமக்கு இன்பம் தரும்.

# சைவ முன்னேற்றச் சங்கத்தின்
# 38ஆவது ஆண்டு நிறைவுவிழா

சைவ முன்னேற்றச் சங்கத்தின் 38ஆவது ஆண்டு நிறைவு விழா, 2015ஆம் ஆண்டு செப்டெம்பர மாதம், பன்னிரண்டாம் நாள் வெகு விமரிசையாக நடந்தது. Harrow council நகரபிதா திரு கிருஷ்ணா சுரேஷ் அவர்கள் தலைமையில், Woodford Green, Woodbridge High school, மண்டபத்தில் நடைபெற்ற விழாவைச் சங்கத்தின் சிவாசாரியார், சிவஸ்ரீ ரமேஷ் குருக்கள் அவர்கள் இறைவழிபாட்டுடன் ஆரம்பித்துவைத்தார். 38 அகல்விளக்குக்களைச் சங்கமாதர்கள் ஏற்றிவைக்க, ஏனைய நிகழ்வுகள் தொடர்ந்து நடைபெற்றன.

இந்த ஆண்டு நடைபெற்ற விழாவில், திரு அ வயிரவமூர்த்தி அவர்கள் கௌரவிக்கப்பட்டார்கள். திரு ஆனந்ததியாகர் தலைமையுரை ஆற்றினார். பின்னர் செயலாளர் திரு இந்துசேகரம் செய்த அறிமுகத்தைத் தொடர்ந்து திரு தியாகமூர்த்தி அவர்கள் கௌரவிக்கப்படுபவரைப் பற்றிப் பாராட்டுரை வழங்கினார். திரு வயிரவமூர்த்தி அவர்கள் தமிழினத்துக்கும் சைவத்துக்கும் 45 வருடங்களுக்கு மேலாகச் செய்துவரும் சேவையின் அங்கீகாரமாகப் பாராட்டு அமைந்தது.

அன்றைய கலை நிகழ்ச்சிகளில், திருமதி செந்தில்செல்வி வாமனானந்தனின் மாணவிகளின் வீணை இசையும், செல்விகள் தர்ஷனா தம்பு, தநுஷா பேரின்பநாதன் ஆகியோரின் நடன நிகழ்ச்சிகளும் மக்களை மகிழ்வித்தன. சைவ முன்னேற்றச் சங்கத்தின் மூத்தோர் நிலையத்தினர் நடித்த “சூட்கேஸ்” என்ற நாடகமும், வழக்கறிஞர் திரு சிறிகாந்தலிங்கமும் குழுவினரும் நடித்த பண்டாரவன்னியன் நாடகமும் பாராட்டுக்களைப் பெற்றன.

மண்டபம் நிறைந்த கூட்டத்துடன் மிகவும் சிறப்பாக நடந்த சங்கத்தின் 38ஆவது ஆண்டு நிறைவுவிழா இரவு விருந்துபசாரத்துடன் இனிது நிறைவுபெற்றது.

**(விழாவின் சில படங்கள் 24ஆம் பக்கத்தில்)**

**If you would like your Kalasam to be sent to your home address, please fill in the form below and send it to us with your payment.**

**கலசம்**
**KALASAM**
இலவச காலாண்டிதழ்

**கலசம் உங்கள் வீடுதேடி வரவேண்டுமா?**
இப்படிவத்தை நிரப்பி அனுப்புங்கள்!

பெயர்
.......................................................
முகவரி :..............................................
.......................................................
.......................................................

Donation:
£..............
Postage:
£.............Total £..........

Kalasam
2 Salisbury Road
Manor Park
London E12 6AB
smsukkalasam@gmail.com

Postage and admin : £20 (U.K/Europe) : £ 30 (Rest of the world) (இரு வருடங்களுக்கு)

# நர்த்தன நடராசர்

- திருமதி புவனேஸ்வரி சபாரட்னம் -

கற்பனை கடந்த சோதி கருணையே யுருவ மாகி
அற்புதக் கோல நீடி யருமறைச் சிரத்தின் மேலாஞ்
சிற்பர வியோம மாகுந் திருச்சிற்றம் பலத்துள் நின்று
பொற்புடன் நடஞ்செய் கின்ற பூங்கழல் போற்றி போற்றி
பெரியபுராணம்

ஆதியும் அந்தமுமில்லாத, அண்டசராசரங்களையும் ஆட்டிப் படைக்கும், அந்த அருட்பெருஞ் சோதியின் அற்புத நடனக்கோலம் கண்டு மெய்ஞ்ஞானம் மெய் சிலிர்க்க, விஞ்ஞானமும் இன்று வியந்து நிற்கிறது.

சைவசமயத்தவரின் முழுமுதற்கடவுளான சிவன் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல், ஆகிய ஐந்து தொழில்களையும் செய்து இந்த உலகை இரட்சிப்பதாகச் சைவசமயத்தவராகிய நாம் நம்புகின்றோம். இதில் நடராஜர் என்பது உருவத் திருமேனிகளில் உள்ள ஒரு வடிவநிலையாகும். நடனத்திற்கு இராஜாவாக இருப்பதனால் அப்பெருமான் நடராஜர் என்று அறியப்படுகின்றார். இந்த உலகம் எவ்வாறு இயங்குகின்றது? இதை இயக்குகின்றவர் யார்? எவ்வாறு ஓர் அட்சரம் கூடப்பிசகாமல் ஒழுங்கான முறையில் இயங்குகின்றது? இவைதான் எம்முடைய மனத்தில் எழும் கேள்விகள். கற்பனைக்கும் கண்ணுக்கும் அப்பாற்பட்ட அற்புத ஜோதியான சிவனின் நடனம் இப்பிரபஞ்சத்திற்கு ஒழுங்கைக் கொடுக்கிறது. பயங்கரமான சுடுகாட்டிலும் அவர் ஆடுகின்றார்; புனிதமான தில்லையம்பலத்திலும் ஆடுகிறார்.

**அம்பலத்தான்:**

அம்பலம் என்பது திறந்த வெளி, எல்லையற்றது. அம்பலத்தில் ஆடுவதால் அம்பலத்தான் என்றும், நடனத்திற்கு இராஜாவாகையால் நடராஜர் என்றும், தில்லையில், கனகசபையிலே ஆடுவதால், கனகசபேசன் என்றும், தில்லைக்கூத்தன் என்றும் நடராஜருக்குப் பல பெயர்கள் உள. நடராஜர் பொற்சபை, வெள்ளிச்சபை, தாமிரசபை, இரத்தினசபை, சித்திரசபை என ஐந்து சபைகளில் ஆடுவதாகப் புராணங்கள் கூடுகின்றன.

**தாண்டவம்:**

சிதம்பரம் நடராஜரின் தாண்டவம் ஆனந்தத் தாண்டவம் எனப்படும். ஆனந்தம் என்பது ஆன்மாவின் மகிழ்ச்சி (Dance of Bliss). இது பிரபஞ்சத்தின் சுழற்சியான படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்ற ஐந்தொழில்களின் அடையாளமாகவும் திகழ்கிறது. சிவதாண்டவம் என்பது பொதுவாகப் பரதநாட்டியத்தில் ஆண்களால் ஆடப்படும் நடனமாகும். இதில் 108 கரணங்கள் உள. நடராஜர் என்று அறியப்படும் சிவனே பரதநாட்டியத்தில் உள்ள 108 கரணங்களின் நுணுக்கங்களைத் தண்டு முனிவருக்கும், பரதமுனிவருக்கும் கற்பித்தார் என்று நாட்டிய சாத்திரத்தில் கூறப்படுகிறது. தென்னிந்தியாவில் ஆடப்படும் புனிதமான தாண்டவம் மிகவும் சக்திவாய்ந்த துரிதமான அசைவுகளைக் கொண்ட ஆனந்த நடனமாகும்.

**உருத்திர தாண்டவம்:**

நடராஜரின் உருத்திர தாண்டவம், இயற்கையான கோபத்தைக் காட்டுகிறது. முதலில் பிரபஞ்சத்தின் படைப்பாளராகவும் பின்னர் அதனை அழிப்பவராகவும் இருக்கிறார் இறைவன். அந்த அழிவின்போது ஆடுவது உருத்திர தாண்டவம். தாண்டவம் பிரபஞ்சத்தின் பிறப்பு இறப்பு சுழற்சியை மாத்திரமன்றி, தினமும் நடந்துகொண்டிருக்கும் பிறப்பு இறப்பு என்ற ஒழுங்கான அசைவுகளையும் பிரதிபலிக்கிறது. தாண்டவங்களில் ஆனந்த தாண்டவம், ருத்திர தாண்டவம், திரிபுரா தாண்டவம், சந்தியா தாண்டவம், காலிகா தாண்டவம், உமா தாண்டவம், கௌரி தாண்டவம் என ஏழு வகைகளுண்டு.

சிவதாண்டவத்தின் அடையாளமான நடராஜர் உருவம் மிகவும் அற்புதமானது. ஒரு தனித்த உருவத்திலேயே பிரபஞ்சத்தைப் படைப்பவர், காப்பவர், அழிப்பவர் ஆகவும், பங்கேற்பவராகவும், முடிவற்ற காலச்சுழற்சியின் காப்பாளராகவும் சிவன் விளங்குகிறார். நடராஜரின் நடனம் தீப்பிழம்பான ஒளிவட்டத்தினுள்ளாகவே வடிவமைக்கப்பட்டு இருக்கிறது. இந்த நடராஜரின் நடனத் திருவுருவம் 5ஆம் நூற்றாண்டிலே தோன்றிய சிலைவடிவ மூலம் என அறியமுடிகிறது. அன்றைய நாளில் அந்தப் பிரசித்தி பெற்ற நர்த்தனமாடும் நடராஜர் சிலை வடிவம் சோழர்களின் ஆட்சிக்காலத்தின் சிற்பிகளால் தோற்றுவிக்கப்பட்டது.

இடது பாதம் தூக்கி நின்று நடனமாடும் நடராஜரின் வலதுபக்க மேற்கையிலுள்ள உடுக்கை படைப்பின் தொனியைத் தோற்றுவிக்கிறது. இதனால், படைத்தல் நடைபெறுகிறது. இடதுபக்க மேற்கரம் அக்கினியைக் கொண்டிருப்பதால் அழித்தல் நடைபெறுகிறது. வலதுபக்கமுள்ள கீழ்க்கரம் அபயமுத்திரையெனப்படுவது, ஆன்மாக்களின் அச்சத்தைப் போக்கி அபயம் அளிக்கிறது. சிவனது இடது கீழ்ப்பாகம் நோக்கியுள்ள கரம் இறைவனது தூக்கிய இடது பாதத்தைக் குறிப்பாகக் காட்டுகிறது. இதன் அர்த்தம் துன்பப்படும் ஆன்மாவிற்கு அடைக்கலம் அளிப்பதாகும்.

நடராஜரின் வலது பாதத்தின் கீழ் நசுங்கிக் கொண்டிருக்கும் உருவம், மாயையிலிருந்து விடுபட்டு சரியான பாதைக்கு ஆன்மாவை இட்டுச் செல்வதாகும். நடராஜரின் திருவுருவத்தில் காணப்படும் நாகம் காலச்சுழற்சியையும், முடியிலிருந்து பிரவாகிக்கும் கங்கை இறைவனது வற்றாத அருளையும், பிறை ஆக்கத்தையும் விளங்கவைக்கிறது.

இரு காதுகளிலும் காதணிகள், வலது காதிலே பாம்பு வடிவ வளையம் இடது காதில் அழகான கனிவான தோடு. இந்தக் கோலம் இடது பாகத்தில் அதாவது தனது இதயத்தில் உமையவளை இருத்தி அவளும் தன்னில் ஒருபாதியென்பதை எண்ணிப்பார்த்து வியக்கவைக்கும் அற்புதமான கோலமாகும். தன்னிலே பாதியைப் பார்வதிக்குக் கொடுத்ததனால், சக்தியின் துணையின்றி இறைவனாற்கூட இயங்கமுடியாது என்பதை உலகிற்கு உணர்த்துவதன் மூலம் பெண்மையென்பது ஆண்மையின் சக்தி என்பது உணரப்படுகிறது. புருவங்களுக்கு மத்தியில் நெருப்பாய் எரியும் மூன்றாவது கண் முக்காலத்தையும் கடந்தது.

இந்தப் பிரபஞ்சத்தைத் தோற்றுவித்த இறைவன் அதன் இருதய ஸ்தானமாகச் சிதம்பரத்தை தோற்றுவித்தார். இந்தப் பூலோக ஆடுகளத்தில் இருந்தவாறு ஆனந்தத் தாண்டவத்தை நிகழ்த்துகின்றார். சிதம்பரம் கோயிலில் ஆடல் வல்லவனாக நடராஜர் ஆனந்தத்தாண்டவம் புரியும் இடமே சித்சபை ஆகும்.

இறைவன் இடைவிடாது நின்றாடும் சித்சபையின் பஞ்சபீடங்களாவன -

| | | |
|---|---|---|
| ப்ரம்ம பீடம் | - | படைத்தல் |
| விஷ்ணு பீடம் | - | காத்தல் |
| உருத்ர பீடம் | - | அழித்தல் |
| மகேஸ்வர பீடம் | - | மறைத்தல் |
| சதாசிவ பீடம் | - | அருளல் |

நடராஜரின் திருப்பாதங்கள் காந்தசக்தி கொண்ட பூமத்திய ரேகையின் நடுப்பாகத்தில் உள்ளதாக விஞ்ஞானிகளும் ஏற்றுக்கொண்டிருப்பதாக அறியப்படுகிறது. இதனை திருமந்திரம் என்னும், உலகிற்கே விஞ்ஞான வழிகாட்டியாக விளங்கும் 3000 பாடல்களை எழுதிய திருமூலர் குறிப்பிட்டுள்ளார். சிவபெருமான் உலகமெங்கும் தாமே நிறைந்து உலகக் குருவாய் விளங்கும் உண்மையினை நடராஜரின் நடனத் திருவுருவம் உலகிற்கு உணர்த்துகிறது.

2004ஆம் ஆண்டு CERN என்று அழைக்கப்படும் EUROPEAN CENTRE FOR RESEARCH FOR PARTICLES PHYSICS என்ற நிறுவனம் சுவிற்சர்லாந்து, ஜெனிவாவிலுள்ள தமது நிறுவனத்தின் வாசலில் 2 மீட்டர் உயரமுள்ள நடராஜரின் சிலையொன்றை நிறுவித் திரைநீக்கம் செய்துள்ளது. இச்செயலை வெறும் அழகிற்காக மட்டும் நிறுவியதாக நாம் எண்ணமுடியாது. நடராஜர் சிலை மூலம் அறிந்துகொண்ட மெய்ஞ்ஞான தத்துவத்தை, விஞ்ஞானிகளும் ஏற்றுக் கொண்டுள்ளார்கள் என்பதனையே இது எமக்குப் புரியவைக்கிறது.

யாரால் உருவமைக்கப்பட்டபோதும் நடராஜரின் நடனத் திருக்கோலமும் அதன் மேன்மையான தத்துவமும் காலத்தின் தூய்மையான கடவுளின் செயற்பாட்டை சித்தரிப்பதென்பது எங்கள்



சமயத்தைப் பெருமைகொள்ள வைக்கிறது.

குனித்த புருவமுங் கொவ்வைச் செவ்வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியிற்பால் வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்தபொற் பாதமுங் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவ தேயிந்த மாநிலத்தே

- அப்பர்



உ
திருவருள் துணை

# சிவயோகம்
# SIVAYOGAM

(Charity Reg No: 1050398 Since: 1995)



## ஈழம் அனாதர் பதியிலர் கதியிலர் நிதியம்

அருள்மிகு இலண்டன் முத்துமாரியம்மன் திருக்கோயில் Tel. 0208 767 9881
அருள்மிகு இலண்டன் நடராஜர் திருக்கோயில் Tel. 0208 795 4258
www. sivayogam.org, email - sivashakthy@sivayogam.co.uk

## சிவயோகத்தின் அறப்பணி

கடந்த 1999ம் வருடம் முதல் சிவயோக அறக்கட்டளை தாயகத்தில் பல சேவைகளை செய்து வருகிறது. தற்போது ஆலயம் உள்ள சூழ்நிலையிலும் யுத்தத்தினாலும், இயற்கை அனர்த்தத்தினாலும் பாதிக்கப்பட்ட 103 ஆதரவற்ற குழந்தைகளை யாழ்ப்பாணம், மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய இடங்களில் பராமரித்து வருகின்றோம்.

### அன்னை இல்லம் - இலண்டன் சிவயோகம் சிறுவர் காப்பகம், மன்னார்

மன்னார் மாவட்டத்தில் நிலவிய யுத்த சூழ்நிலையைப் பயன்படுத்தி இந்துக்களை மதம் மாற்றும் நடவடிக்கைகளை தடுக்கும் முகமாக மன்னார் பட்டினத்தில் வாழ்ந்த சிலர் 07.06.2001ல் "அன்னை இல்லம்" என்ற பெயரில் சிறுவர் இல்லம் ஒன்றினை 12 சிறுவர்களுடன் தொடங்கினர். சிறிது காலம் உறுப்பினர்களின் நிதிப் பங்களிப்போடு நடாத்தி வரப்பட்டது. எனினும் குறுகிய காலத்தில் 33 சிறுவர்களை பொறுப்பேற்க வேண்டியதாயிற்று. இக் கட்டத்தில் நிதிப் பிரச்சனையை சமாளிக்க முடியாது திண்டாடிய வேளையில் கும்பிடப் போக தெய்வம் குறுக்கே வந்தது போல் சிவயோகம் எங்களுக்கு உதவிக்கரம் நீட்டியது. அன்று முதல் "இலண்டன் சிவயோகம் சிறுவர் காப்பகம்" என்ற வகையில் தொடர்ந்து சராசரியாக 50 சிறுவர்கள் பராமரிக்கப்படுகின்றார்கள்.

சிவயோகம் அமைப்பினருக்கு பல்வேறு நெருக்கடிகள் வந்த போதும் இல்லச் சிறுவர்களுக்கு அளித்து வரும் நிதியானது எந்தவித குறைவுமின்றி தடைகளுமின்றி மிகுந்த அக்கறையோடு மாதாந்தம் தவறாது கிடைக்கப்பெறுகின்றது. இதுவரை சிவயோகத்தின் உதவியினால் சிறந்த கல்வியுடன் கூடிய பயன் பெற்று வெளியேறி குடும்பங்களுடன் இணைந்துள்ள நூற்றுக்கணக்கான பிள்ளைகளுள் 7 பேர் பல்கலைக்கழக கல்வியைப் பெற்வர்களாகவும் தொழிற் கல்வியைப் பெற்றவர்களாகவும் தொழில் புரிகின்றவர்களாகவும் காணப்படுகின்றனர். மன்னார் மாவட்டத்தில் சகல கிராமங்களிலும் இயங்கும் அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கு நீண்ட காலமாக வேதனத்தையும் சிவயோகம் வழங்கி வந்தது. சிவயோகம் இல்லை என்றால் மன்னாரில் இந்துச் சிறுவர் இல்லம் ஒன்று இயங்கியிருக்க வாய்ப்பே கிடையாது. இன்று ஒரு இந்துச் சிறுமி பாதிக்கப்பட்டால் அடைக்கலம் கொடுப்பதற்கு இல்லம் தயாராகவுள்ளது.

- திரு. செ.சி. இராமகிருஸ்ணன், செயலதிபர், அன்னை இல்லம்

### சைவ வித்தியா விருத்திச் சங்கம், திருநெல்வேலி.

இவ்வில்லத்தில் பராமரிக்கப்பட்டு வந்த 250 பிள்ளைகளில் 2001ம் ஆண்டு தொடக்கம் 2013ம் ஆண்டு வரை 50 பிள்ளைகளுக்கு உரிய செலவீனத்தை சிவயோகம் பொறுப்பேற்று வந்தது. அதன்பின் 28 பிள்ளைகளை தொடர்ந்தும் பராமரித்து வருகிறது.

### இலண்டன் சிவயோகம் சிறுமியர் இல்லம், மட்டக்களப்பு

இவ்வில்லத்தில் 2002ம் ஆண்டு தொடக்கம் 27 பிள்ளைகளை சிவயோகம் பொறுப்பேற்று பராமரித்து வருகிறது. இவ்வில்லத்திற்கு தேவையான நிலம் கொள்வனவு செய்யப்பட்டு புதிய கட்டிடம் அமைத்தும், பாதுகாப்பு கருதி சுற்று மதில் அமைத்தும், நீர் ஆதாரத்திற்கு கிணறு வெட்டியும் சகல தேவைகளையும் சிவயோகம் ஏற்று நடாத்தி வருகிறது.

### சிவயோக சமாஜம், திருகோணமலை

2010ம் ஆண்டு தொடக்கம் இவ்வில்லத்தில் உள்ள 9 பிள்ளைகளுக்கும் உரிய செலவீனத்தை சிவயோகம் பொறுப்பேற்று தொடர்ந்தும் பராமரித்து வருகிறது.

2015ம் ஆண்டு மார்ச் மாதம் வரை 689,821 பவுண்டுகள் சிவயோகத்தால் அறப்பணிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. இவற்றின் விபரங்கள் மறுபக்கத்தில் உள்ளன. ஆதரவற்ற குழந்தைகளை தொடர்ந்து பராமரிப்பதற்கு உங்களின் ஒத்துழைப்பினை வேண்டி நிற்கின்றோம்.

ஆதரவற்ற குழந்தைகளின் மகிழ்வான எதிர்காலக் கனவினை நீங்கள் மாதாந்தம் குறைந்தது £10 செலுத்தி, நனவாக்க முடியும். தயவுசெய்து இப்பெரும் பணிக்கு உதவி செய்து பெரும் புண்ணியத்தைப் பெறுங்கள். நன்றி.

Account No. : 80603309 Sort Code : 20 21 78
Account Title : SIVAYOGAM – EELAM DESTITUTES
Barclays Bank, Clapham Group, P O Box 4038, London SW12 9YB.

அறங்காவலர்கள்


Banana Leaf
taste with tradition
அனைத்து விழாக்களுக்கும் உணவு.
பலகார வகைகளும் செய்து கொடுக்கப்படும்.
Tel: 020 8554 4120
Mob: 07969 972 202
Web: www.bananaleafuk.com
Email: info@bananaleafuk.com
4 Central Parade, Ley Street, Ilford , Essex IG2 7DE
We do cater for :
Wedding
Puberty Ceremony
Birthday &
Arangetram Etc.


Veena's
CASH & CARRY
Quality! Variety!! Satisfaction!!!
Worldwide money transfer
bureau de change
FRESH FRUITS & VEGETABLES
FROZEN FOODS
Veena's
at
BARKINGSIDE
020 8550 2700 • www.veenas.com

# சைவமுன்னேற்றச் சங்கம் 38 ஆவது ஆண்டு நிறைவு விழா - 12. 09. 2015 -




திரு. வைரவமூர்த்தி அவர்களைக் கௌரவித்தல்




திரு. ஆனந்தத்தியாகர் தலைமை உரை



செல்வி. தர்ஷனா தம்பு




சங்க முதியோர் நிலையத்தினரின் நாடகம்




செல்வி. தருஷா பேரின்பநாதன்



திருமதி. செந்தில்செல்வி வாமனானந்தன் அவர்களின் மாணவிகள் வீணை இசை

அறிவொளி வளையம்

# ENLIGHTENMENT CIRCLE

**"Empowering Humanity Through Yoga"**

**2 Salisbury Road, Manor Park, London E12 6AB**

## Tube Wells



In Vannei over 3,000 people benefited

## School Library facility



In Vannei over 1,350 children benefited

## Cataract Operation Camp



In Vannei over 100 people benefited.

## A/L Students Education Assistance



In Kalmuni 10 children benefited

## Food for Mentally Challenged Children



In Vavunia 100 children benefited

## Water Pumps for Widows



in Vannei over 20 families benefited

# Satash Community Care






உடற்குறைபாடு அல்லது மனநலக் குறைவு காரணமாக உங்களுக்கோ அல்லது உறவினருக்கோ உதவி தேவைப்படின் பல ஆண்டுகள் அநுபவமும் அங்கீகாரமும் பெற்ற எங்கள் சேவையை நாடுங்கள். அவரவர் தேவைகளுக்கேற்பப் பராமரிப்பைத் திட்டமிட்டு வகுத்துச் செயற்படுத்துவதில் எமது நிறுவனம் பாராட்டும் பரிசும் பெற்றது.

மேலதிக விவரம் அறிய எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்.

**Orchid Bungalow**
51 Mollands Lane,
South Ockendon RM15 6DH
**Adult Services 01708 850555**

**Jasmine Bungalow**
53 Mollands Lane,
South Ockendon RM15 6DH
**Children Services 01708 851189**

109-111 Molands Lane,
South Ockenden RM15 6DJ
**Adult Services 01708 856592**

**Trinity Community Centre**
East Avenue, London E12 6SG
**Domicilary Care 0203 200 1047**

www.satashcommunitycare.com

Letchmi Loganathan
07957 869620
letchmi@satashcommunitycare.com

Logan Loganathan
07956 377298
logan@satashcommunitycare.com

Sathian Loganathan
07949 755104
sathian@satashcommunitycare.com


GOSHIN ISSHIN-RYU KARATE ASSOCIATION
LONDON - UK
SEISHINKAN
GOSHIN ISSHINRYU KARATE
SENSEI M. RAMATHAS
TRAINED BY MICHAEL CALANDRA
THE FIRST AUTHORISED INSTRUCTOR IN THE UNITED KINGDOM OF
ISSHINRYU WORLD KARATE ASSOCIATION
OKINAWA - JAPAN
Michael Calandra
8th Dan, Kyoshi-Go
Isshin-Ryu Karate - Do
NEW YORK - USA
Tel: 001 917 667 0739
Email: oikddojo@aol.com
www.isshinryukarate.com
Other Branches: Gants Hill, Ilford Lane, East Ham, Catford, Chadwell Heath, Sutton, Ley Street
Contact: Incharge & Instructor, Sensei M Ramathas Tel: 07958 010 139
M Ramathas
4th Dan
Isshin-Ryu Karate - Do
LONDON - UK
0044 07958 010 139
Email: goshinissinryukarate@gmail.com
www.goshinisshinryukarate.com


your choice is CLEAR!
invisalign
Come to Bluebell for..
INVISIBLE TOOTH STRAIGHTENING
GUM DISEASE TREATMENT
COSMETIC DENTISTRY
SMILE MAKEOVERS
GENERAL DENTISTRY
ORAL SURGERY & IMPLANTS
ENDODONTICS
CHILDREN'S ORAL HEALTH
EMERGENCY APPOINTMENTS
FACIAL REJUVENATION
Book your FREE consultation today!
Bluebell is an Invisalign® Platinum Elite Provider.
If you have teeth that stick out, are crooked, have gaps or overlap then Invisalign is the best choice for you with clear, almost invisible braces.
Dr Suki Kanagasabai-Shakthi is one of the leading Invisalign® dentists in the UK. With her unique approach to an ethical and non-evasive path of treatment she has become an Invisalign® Platinum Elite Dentist, a title which is only held by a privileged few dentists in the UK.
Bluebell
dental practice & clinic
Making a Difference
CHIGWELL
020 8500 6789
STRATFORD
020 8555 1144
www.bluebelldp.co.uk
You Tube

உ

சைவ முன்னேற்றச் சங்கம்

# அருள்மிகு ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீ சிதம்பரேஸ்வரர் சந்நிதி

# விசேட தினங்கள்

**நவம்பர் (01-11-2015) தொடக்கம் ஜனவரி (14-01-2016) வரை**

| | | |
|---|---|---|
| **08.11.2015** | **ஞாயிறு** | **பிரதோஷம்** |
| **10.11.2015** | **செவ்வாய்** | **தீபாவளி, கேதாரகௌரி விரதம்** |
| **12.11.2015** | **வியாழன்** | **கந்தஷஷ்டி ஆரம்பதினம்** |
| **17.11.2015** | **செவ்வாய்** | **கந்தஷஷ்டி பூர்த்தி** |
| **23.11.2015** | **திங்கள்** | **சோமவார விரதம், பிரதோஷம்** |
| **26-11-2015** | **வியாழன்** | **விநாயகர் விரதம்** |
| **28.11.2015** | **சனி** | **சங்கடஹர சதுர்த்தி** |
| **30.11.2015** | **திங்கள்** | **சோமவார விரதம்** |
| **02.12.2015** | **புதன்** | **ஆறுமுகநாவலர் குருபூசை** |
| **07.12.2015** | **திங்கள்** | **சோமவார விரதம்** |
| **08.12.2015** | **செவ்வாய்** | **பிரதோஷம்** |
| **14.12.2015** | **திங்கள்** | **சோமவார விரதம்** |
| **17.12.2015** | **வியாழன்** | **திருவெம்பாவை ஆரம்பம்** |
| **23.12.2015** | **புதன்** | **பிரதோஷம்** |
| **26.12.2015** | **சனி** | **ஆருத்ரா தரிசனம்** |
| **28.12.2015** | **திங்கள்** | **சங்கடஹர சதுர்த்தி** |

**விசேஷ அறிவித்தல்: ஸ்ரீ சிவகாமசுந்தரி சுந்தரி உடனுறை ஸ்ரீ சிதம்பரேசுவரர் சந்நிதி தினமும் காலை 9.30 மணி முதல் 10.30 மணி வரையும், மாலை 6 மணி முதல் இரவு 9 மணிவரை சிவனடியார்களுக்காகத் திறந்திருக்கும்.**

**தினமும் மாலை 8மணிக்கு பூசை வழிபாடு நடைபெறும். மேலே குறிப்பிட்ட விசேட தினங்களில் அபிடேக ஆராதனை, கூட்டு வழிபாடு போன்றவை நடைபெறும். அன்பர்கள் அனைவரும் சந்நிதிக்கு வந்து வழிபாடுகளிலே கலந்து எல்லாம் வல்ல ஸ்ரீ சிவகாமசுந்தரி உடனுறை ஸ்ரீ சிதம்பரேசப்பெருமானின் திருவருளைப் பெற்றுய்யுமாறு சைவ முன்னேற்றச் சங்கம் அடியார்களை அன்புடன் வரவேற்கிறது.**

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

# சைவ முன்னேற்றச் சங்கம்

## சைவசமயப் பரீட்சை

சைவ முன்னேற்றச் சங்கம், 39ஆவது ஆண்டில் காலடி எடுத்து வைக்கும் இந்த நேரத்தில், ஒரு முக்கிய திட்டமாக, சைவசமய அறிவை மாணவர்களுக்கு வழங்கவும், அவர்களின் அறிவைத் தேர்வுகள் மூலம் ஊக்கப்படுத்தி வளர்க்கவும் முன்வந்துள்ளது. அதன் விளைவாக ஒரு பாடநூலைத் தயாரிக்கின்றது.

பல ஆண்டுகளாகச் சங்கத்தின் தமிழ்ப்பாடசாலையாகிய நால்வர் தமிழ்க் கலை நிலையத்தில் சமயபாட வகுப்புகள் நடைபெற்று வருகின்றன. இவ்வாண்டு, ஒரு பாடத்திட்டத்திற்கு அமைய பாடநூல் உருவாக்கவும், ஆண்டுதோறும் பரீட்சை நடத்தவும் ஒழுங்குகளும் செய்யப்பட்டுள்ளன. இத்திட்டத்தில், சங்கத்தின் முக்கிய நோக்கம் சைவசமயப் பரீட்சையை நடத்துவதல்ல. மாணவர்களுக்குச் சைவசமய அறிவை வளர்ப்பதும், சைவசமயக் கொள்கைளில் ஈடுபாட்டை உண்டாக்குவதுமேயாகும். ஆறு நிலைகளில், மாணவர்களின் வயதிற்கேற்ப பாடத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. தரப்பட்டுள்ள பாடத்திட்டத்தை அடிப்படையாக வைத்தே பரீட்சை நடத்தப்படும்.

மாணவர்கள் பாடத்திட்டத்தில் தரப்பட்டுள்ள செய்திகளை மட்டும் அல்லது விளக்கங்களை மட்டுமே கேள்விக்குப் பதிலாக எழுத அல்லது சொல்ல வேண்டும் என்று கற்பிக்கவேண்டாம். எங்கள் எதிர்பார்ப்பும் அதுவல்ல. ஒரு கேள்விக்குச் சரியான பதில் எதுவாக இருந்தாலும், எங்கள் பாடநூலில் இல்லாத விடையாக இருந்தாலும், பொருத்தமான விடையாக இருந்தால், ஏற்கப்படக் கூடியதே.

பாடத்திட்டத்தில் மாணவர்களுக்குச் செய்தியாகப் பல மேலதிக விடயங்கள் தரப்பட்டுள்ளன. சமய அறிவைக் கொடுக்கும் நோக்கில் கருத்துக்கள் எழுதப்பட்டுள்ளன. அத்தனையிலும் மாணவர்களின் அறிவைப் பரீட்சை மூலமாகத் தெரிந்துகொள்வது எங்கள் நோக்கமல்ல.

உதாரணம் 1: சிவபெருமானுக்குரிய ஒரு விரதத்தின் பெயர் எழுதுக என்று கேட்கப்பட்டால் எங்கள் பாடநூலில் தரப்படாத சோமவாரம் அல்லது பிரதோஷம் என்ற விடைகளும் ஏற்றுக் கொள்ளப்படும்.

உதாரணம் 2: முதலாம் நிலையில் ஆத்திசூடி 13 வரிகள் தரப்பட்டுள்ளன. பரீட்சையில் 4 அல்லது 5 வரிகள் மட்டுமே கேட்கப்படலாம்.

உதாரணம் 3: இரண்டாம் நிலையில், சிவபெருமானைப் பற்றி 10 வரிகளும், ஆலயத்தைப்பற்றி 25உக்கு மேற்பட்ட வரிகளும் உள்ளன. மாணவருக்கு, இதைப் படிப்பதன் வாயிலாகச் சிவபெருமானைப் பற்றிய சில வரிகளும், ஆலயத்தைப் பற்றிய சில உண்மைகளும் பதிலாக எழுதத் தெரிந்திருக்குமானால், அது ஒரு முன்னேற்றமே. இதுவே எங்களின் எதிர்பார்ப்புமாகும்.

உதாரணம் 4: நான்காம் நிலையில் நாயன்மார்களின் வாழ்க்கை வரலாற்றின் பல பகுதிகள் தரப்பட்டுள்ளன. திருஞானசம்பந்தரைப்பற்றிச் சுருக்கமாக 12 வரிகள் எழுதுக என்று

கேட்கப்பட்டால் பாடத்திட்டத்தில் உள்ள செய்தியை எழுதலாம். அல்லது மாணவர் திருஞானசம்பந்தரைப்பற்றித் தெரிந்துகொண்ட எந்த விடயத்தையும் எழுதலாம்.

உதாரணம் 5: மேல்நிலைப் பாடத்திட்டத்தில் சைவசித்தாந்தத்தின் பல பகுதிகள் விளங்கப்படுத்தப்பட்டுள்ளன. நாம் எதிர்பார்ப்பது மாணவருக்குச் சைவசிந்தாந்தம் பற்றிய அறிமுகம் கிடைத்துள்ளதா என்பதுதான். கேள்வி பின்வருமாறு அமையலாம். சைவ சித்தாந்தத்தைப்பற்றி உமது விளக்கம் என்ன? 10 வரிகள் எழுதவும் என்று கேட்கப்படலாம்.

எங்களுடைய இந்த முயற்சிக்குப் பெற்றோர், தமிழ்ப் பாடசாலைகள், ஆலயங்கள், சமய சமூக ஆர்வலர்கள் ஆகியோர் ஒத்துழைக்க வேண்டுமெனப் பணிவாகக் கேட்டுக்கொள்கிறோம்.

நாம் சைவ முன்னேற்றச் சங்க மண்டபத்தில் 12.12.2015 அன்று சமயபாடத் தேர்வை நடத்த எண்ணியுள்ளோம்.

தேர்வுகள் ஆறு நிலைகளில் பிரிவுகளில் நடத்தப்படும்.

| | |
|---|---|
| முதலாம் நிலை | 5 வயதுக்கு உட்பட்டவர்கள் |
| இரண்டாம் நிலை | 5 முதல் 7 வயது வரை |
| மூன்றாம் நிலை | 8 முதல் 10 வயது வரை |
| நான்காம் நிலை | 11 முதல் 13 வயது வரை |
| ஐந்தாம் நிலை | 14 முதல் 17 வயது வரை |
| ஆறாம் நிலை | 17 முதல் 20 வயது வரை |

**பாடத்திட்டத்தையும் விவரங்களையும் பார்வையிடக்கூடிய இணையதளம் :**
**www.saivamunnettasangam.com**

பரீட்சைத் திகதி: 12.12.2015
நேரம்: காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை
**பிரிவுகளுக்கு ஏற்பப் பரீட்சை நேரம் சுமார் 30 நிமிடம் முதல் 90 நிமிடம்வரை வேறுபடும்**
விண்ணப்ப முடிவுத் திகதி: 05.12.2015

விண்ணப்பங்கள் எழுத்தில் இணைய தளத்தில் அல்லது படிவத்தில் (விண்ணப்பப் பத்திரத்தில்) செய்யலாம் என்பதைப் பணிவுடன் அறிவிக்கின்றோம்.

**எங்களின் நோக்கத்தைப் பெற்றோர் தெளிவாக விளங்கித் தம்முடைய பிள்ளைகளுக்குச் சமய அறிவை ஊட்ட முன்வர வேண்டுமெனப் பணிவாகக் கேட்டுக்கொள்கிறோம். ஆலய வழிபாட்டுடன் சமய அறிவையும் கொடுப்பதால் அவர்களின் வாழ்வு வளமாகும் என்பது எங்கள் நம்பிக்கை.**

தொலைபேசித் தொடர்புகளுக்கு:
0208 514 4732 சங்கப் பணிமனை
07956 150580 திரு. ஜெகேந்திரபோஸ்
(பரீட்சைத் துறைச் செயலாளர்)

**இப்படிக்கு**
**வே. ஜெகேந்திரபோஸ்**
**(கௌரவ பரீட்சைத் துறைச் செயலாளர்)**

# மூர்த்தி நாயனார்

பாண்டியநாடு மிகப்பழமையானது. பழம்பெரும் புகழ் பூண்டது. நிரையான செல்வக் குடிமக்கள் நிறைந்தது. நல்ல மனம் படைத்த அன்பர்களாலும் பலதுறை மாந்தர்களாலும் போற்றப்படுவது. மேகங்கள் தங்கும் உயர்ந்த மணிமாடங்களை உடையது.

அந்த நாடு முத்துக்களுக்குப் பிரசித்தி பெற்றது. தாமிரவருணி ஆறு பாய்ந்தோடிக் கடலிலே சங்கமமாகும் இடத்தில் நீர் முத்துக்கள் விளையும். அங்கு அது மட்டுமல்ல, பூங்கொடிபோல் துவளும் பெண்களின் இடையிலும், நீண்ட நெடுங் கண்களிலும் மூங்கில் போன்ற தோள்களிலும் முத்துக்கள் பொலிவுறும். அப்பெண்களின் பண்ணிசை வாயிலும் முத்துக்கள் பிறக்கும். அந்நாட்டிலே, சந்தனங்கள் நிறைந்த பொதியமலை இருக்கிறது. அம் மலையிலிருந்து உலாவிவரும் தென்றற் காற்றோடு தெய்வீகமான தமிழ் மணமும் ஒன்றாகக் கலந்து குளிர்மை வீசும். இத்தகைய பாண்டிய நாட்டிற்குத் தலைநகரமாகத் திகழ்வது மதுரை மாநகரமாகும். அந்நகரத்துப் பெண்கள் மகாலட்சுமிபோலத் தோற்றமளிப்பார்கள். அப்பெண்களின் வாய்ச்சொல்லில் இன்னிசையும், மலர்க்கூந்தலில் வண்டுகளும் இறுமாந்து வாழும். மதுரை அமைதியாக முத்தமிழ் வளர்த்த மூதூர்! தமிழ் பயின்ற பல புலவர்களைக் கொண்ட, தமிழ்ச்சங்கங்கள் அங்கு விளங்கி வந்தன. சங்கப் புலவர்களில் இறைவரே தாமும் ஒருவராக இருந்து தமிழாராய்ந்த பெருமையும் அவ்வூருக்கு உண்டு. மீனாட்சியம்மையுடன் சோமசுந்தரக்கடவுள் எழுந்தருளியுள்ள திருவாலவாய் என்ற திருக்கோயிலும் அந்நகரில் அமைந்துள்ளது.

இத்தகைய மதுரைத் திருநகரில், வணிகர் குலத்திலே, சீரும் செல்வமும் உடைய பழங்குடியினர் செய்த அருந்தவத்தின் பயனாக, மூர்த்தியார் தோன்றினார். அவர் சிவபத்தியிற் சிறந்தவர். எப்பற்றுமற்ற சிவபெருமான் திருவடிகளே மெய்ப்பற்றெனப் பற்றிக்கொண்டு அதிலேயே விடாது பெருங்காதல் கொண்டு நாள்தோறும் பெருகும் சிவநேச வேட்கையாலே மனம் உருகுவார். தமக்குச் சொந்த பந்தங்களோ, நிலையான பேறுகளோ ஆளும் பெருமானின் திருவடித் தாமரைகளைத் தவிர, வேறெதுவும் இல்லையெனக் கருதுவார். மூண்டெழும் அப்பேரன்பின் வடிவமாகவே அவர் திகழ்வார்.

அவர் நாள்தோறும் திருவாலவாயில் எழுந்தருளியிருக்கும் சோமசுந்தரப் பெருமானுக்குச் சந்தனக்காப்பு அணிவித்து மகிழ்வுறும் திருத்தொண்டு செய்து வந்தார். எந்தக் காரணத்தைக் கொண்டும் அந்தத் திருப்பணிக்கு தட்டுப்பாடு வராது அடியார் உவக்கப் பணியாற்றுவதில் கண்ணும் கருத்துமாய் மூர்த்தியார் இருந்து வந்தார்.

அந்தக் காலத்தில், கருநாடக தேசத்து வடுகமன்னன் ஒருவன் தன் வலிமையால், மண்ணாசை கொண்டு யானைப்படை, குதிரைப்படை, கருவிப்படை வீரப்படை முதலியனவற்றையெல்லாம் ஒருங்கே திரட்டிக்கொண்டு தென்னாடு நோக்கிப் படையெடுத்து வந்தான். பாண்டிய நாட்டு மண் புதையும்படியான அளவிற்குப் பெரும்படையைப் பரப்பினான். செந்தமிழ் நாட்டுப் பாண்டிய மன்னனின் வீரம் போர்க்களத்திலே சிந்திமாளும்படி அவன் போரக்களத்திலே முரட்டுப் போர்புரிந்து வாகை சூடி, வெற்றி வீரனாய்ப் பாண்டிய நாட்டின் ஆட்சியைக் கவர்ந்து கொண்டான். பிறகு, மதுரையைத் தலைநகரமாகக் கொண்டு அக்கருநாடக மன்னனே பாண்டிய நாட்டைக் காவல் புரிந்து வந்தான்.

அவ்வடுக வேந்தன் திருநீற்றுச் சார்புடைய மன்னன் அல்லன். சிவமதத்திலே சிந்தை செலுத்தாமல், சமணமதத்தைப் பின்பற்றிச் சிந்தை தாழ்ந்தவன். அது மட்டுமல்ல, தன் முன்வினைப்பயனால், அக்கொடியவன் சிவனடியார்களைத் துன்புறுத்தியும் வந்தான். திருவாலவாய்த் திருக்கோயிலிலே சொக்கலிங்கப்பெருமானுக்குத் திருத்தொண்டு புரிந்துவரும் மூர்த்தியாரையும் அக்கல்நெஞ்சக் கயவன் ஏளனம் செய்திட விரும்பி எண்ணிலாக் கொடுமைகள் பல செய்துவந்தான். அவ்விடையூறுகளையெல்லாம் மூர்த்தியார் பொருட்படுத்திக் கொள்ளவில்லை. கோயிலிலே சிவபெருமானுக்குச் சந்தனக்காப்பு இடும் திருப்பணியை வழுவாமற் செய்து வந்தார். அதுகண்ட கொடுங்கோல் வேந்தன், அதன் பிறகு மூர்த்தியாருக்குச் சந்தனக் கட்டைகள் கிடைக்காதவாறு எல்லாவிதத் தடைகளையும் செய்துவிட்டான். மூர்த்தி நாயனார் மனம் வருந்தினார். வருத்த மேலீட்டால், "இக் கொடுங்கோல் புரியும் மாபாதகன் எப்போ மாய்ந்திடுவான்? திருநீற்றின் சைவ நெறியைத் தாங்கும் நல்ல அரசனை இந்த நாடு எப்போது பெறுவது?" என்று மூர்த்தி நாயனார் எண்ணி எண்ணி ஏங்கினார். அந்த ஏக்கத்தோடு சந்தனக் கட்டைக்காகப் பகல் முழுவதும் தேடித் திரிந்தார். நல்ல சந்தனக் கட்டைகள் எங்குமே கிடைக்கவில்லை!



மூர்தியார் என்ன செய்வார்? சிந்தை சரிந்திட, தலைகுனிந்தபடியே அவர் திருவாலவாய்த் திருக்கோயிலுக்குத் திரும்பி வந்து, சொக்கலிங்கப் பெருமானைத் துதித்தார். "இன்று இறைவனது மெய்ப்பூச்சுக்குத் தேய்த்துக் கொடுக்கச் சந்தனக் கட்டைகள் முட்டு நேர்ந்தால் என்ன? அதைத் தேய்க்கும் என் கைக்கு ஒரு முட்டும் நேரவில்லையே?" என்று கருதிச் சந்தனம் உரைக்கும் ஒரு வட்டமான கருங்கல்லிலே தமது முழங்கையை வைத்துத் தேய்த்தார். முழங்கை தேய்ந்து தேய்ந்து இரத்தம் சொரிந்து வெள்ளம்போலப் பாய்ந்தது. தோலும் தசையும் எலும்பும் தேய்ந்து வெளிப்பட்டன. கடைசியில் எலும்புத் துவாரங்களும் திறந்த முனை ஒழுகி வெளியே வந்தது. அதைக் கண்டதும் சொக்கநாதப்பெருமானுக்குப் பொறுக்கவில்லை.

"ஐயனே! மெய்யன்பின் துணிவால் இந்தச் செயலைச் செய்யாதே! உனக்குக் கொடும் தீங்கு விளைவித்த கொடுங்கோலனின் அரசு முழுமையும் நீயே நாளை கைக்கொண்டு, முன்பு அவனால் விளைந்த தீமைகளையெல்லாம் நீக்கி, உலகத்தைக் காத்து உனது திருப்பணியாகிய சந்தனக் காப்பணி செய்து, முடிவில், நமது சிவலோகத்தை அடைவாயாக!" என்று திருவாக்கு அசரீரியாக எழுந்தது. அதைக் கேட்டலும் மூர்த்தியார் அஞ்சியெழுந்து, தமது கையைத் தேய்ப்பதை நிறுத்திக் கொண்டார். தேய்த்ததாற் புண்பட்டு ஊறுபாடடைந்த அவரது கையும் ஊறு நீங்கி, இரத்த நாற்றம் நீங்கி, முன்போல் மாறி அழகொளி வீசியது. மூர்த்தியார் சிவமணங்கமழும் திருமேனியுடன் திகழ்ந்தார்.

அன்றிரவு, சமணமதச் சார்புடையவனாகப் போர்வெறி பிடித்த வடுகக் கர்நாடக மன்னன் திடீரென இறந்து கொடுநரகத்தில் போய் விழுந்தான். தீமையே புரியும் அம்மூர்க்கன் மடிந்தொழிந்ததும் அவனுடைய மனைவியும் சுற்றத்தினரும் அழுது புலம்பி வாட்டமுற்றனர். அக்கொடியவனைப் போன்று, இருட்பொழுதும் நீங்கிப் பொழுது புலர்ந்தது. கதிரவன் கீழ்த்திசையில் எழுந்தான். அப்பொழுது அமைச்சர் முதலியோர் இறந்த அரசனுக்கு ஈமக்கிரியைகள் செய்தார்கள். மாண்டுபோன மன்னனுக்கு மக்கட்பேறு இல்லாததால், "இனி நாட்டை யாரைக்கொண்டு

ஆள்வது?" என்று அவர்கள் ஆலோசனை நடத்தினார்கள். "உணவுப் பொருள்களும் நல்ல குடிமக்களும் இருந்தாலும் வேந்தனின் காவல் இல்லாமல் வையகம் வாழாது. பலவிதமான உயிர்களையும் காத்து அருளும் மன்னன் இல்லாத மண்ணுலகம் இன்னுயிர் இல்லாத வெறும் உடற்கூட்டுக்கு இணையாகும்! ஆகவே காலதாமதமின்றி நாட்டுக்கொரு காவலனைத் தேரந்தெடுத்தாக வேண்டும்!" என்று கூறினார்கள். முடிவில் ஒரு யானையைக் கண்கட்டி விடுதல் வேண்டும் என்றும், அந்த யானை எவரை எடுத்துக் கொண்டு வருகின்றதோ, அவரே அரசராதல் வேண்டும் என்று அமைச்சர்கள் தீர்மானித்தார்கள். அங்ஙனமே பட்டத்து யானைக்கு முறைப்படி பூசை முதலிய கிரியைகளை நடத்தி "நீ இந்த நாட்டை ஆளுவதற்கு வல்ல ஓர் ஏந்தலை எடுத்துக்கொண்டு வருக" என்று அவர்கள் சொல்லி யானையின் கண்களை ஒரு வஸ்திரத்தால் கட்டி வெளியே அனுப்பிவைத்தார்கள்.

மதுரை மாநகரத்து வீதிகளில், மேலே பரக்கப் பரக்க அந்தப் பட்டத்து யானை சுற்றித் திரிந்து விட்டுத் திருவாலவாயின் திருக்கோபுரத்திற்கு முன்னே விரைந்து போயிற்று. முதல் நாள் இரவிற் செய்தியை அறிந்த மூர்த்தியார், " எம்பெருமானின் திருவருள் இதுவெனில் அடியேன் வையம் தாங்கி இந்நாட்டை ஆளும் செயல் பூண்பேன்!"என்று நினைத்துக் கொண்டு, உள்ளத் தளர்வு நீங்கி சிவபெருமானின் திருக்கோயிலின் ஒருபுறத்தில் நின்று கொண்டிருந்தார்.

பட்டத்து யானை விரைந்து நடந்து சென்று, உலகத்தார் செய்த தவப்பயனால் மூர்த்தி வள்ளலார் இருந்த இடத்தை அடைந்து, அவர் முன் தாழ்ந்து அவரைத் தனது துதிக்யைால் தூக்கியெடுத்துத் தன் பிடரியின்மீது வைத்துக் கொண்டது. அதைக் கண்ட அமைச்சர்கள் அனைவரும் வியப்புற்று "உலகத் துன்பங்கள் கெட, ஒரு சிவனடியாரே அரசராகக் கிடைத்தார்!" என்று உவகையுற்று மூர்த்தியாரின் திருவடிகளில் வணங்கியெழுந்தார்கள். அப்பொழுது ஊர் மக்கள் அனைவரும் கடலலைபோல ஆரவாரம் செய்தனர். பேரிகைகள் அதிர்ந்தன. தாரைகள் ஒலித்தன. சங்குகள் முழங்கின. எங்கெங்கும் பல்லியங்கள் இயம்பின. வாழ்த்தொலிகள் பொங்கின. மூர்த்தி நாயனாரைப் பட்டத்துயானை சுமந்து கொண்டு சென்று அலங்கரிக்கப்பட்ட முடிசூட்டும் மண்டபத்திலே சேர்த்தது.

மலர்மாலைகளும் மணிமாலைகளும் சூழ்ந்த மண்டபத்தில், யானை மீதிருந்த மூர்த்தி நாயனாரை அமைச்சர்கள் கீழே இறக்கி, நாயனாரை அரசராகக் கொண்டு சிங்காசனத்தில் வீற்றிருக்கச் செய்தார்கள். மூர்த்தியார் இருந்த திசையில் ஓமக் குண்டமிட்டு அதில் நெருப்பை வளர்த்தார்கள். மங்களநூல் சுற்றிய பொற்கலசங்களிலும் குடங்களிலும் நன்னீரை நிரப்பினார்கள். இவ்வாறு முடிசூட்டு விழாவிற்குரிய மங்கலக்கிரியைகளை நிகழ்த்தலானார்கள். அப்போது, சிந்தையெல்லாம் சிவமயமான மூர்த்தி நாயனார் அமைச்சர்களை நோக்கி, "முந்திய சமணம் மறைந்து, சைவம் ஓங்கினால்தான் நான் இந்த அரசாட்சியை ஏற்று நாடாள்வேன்!"என்றார். அதைக்கேட்ட அமைச்சர்களும் வேதாகமங்களைக் கற்றறிந்த பெரியோர்களும் அவரை வணங்கி, "எவ்விதமாக நீர் கட்டளையிடுகின்றீரோ அவ்விதமே நாங்கள் செய்கிறோம்!" என்றார்கள்.

அதன் பிறகும் மூர்த்தி நாயனார்," நான் இந்த அரசாட்சியை ஏற்பேனாகில், எனக்கு விபூதியே அபிஷேகப் பொருளாகவும் சிவனடியார்களின் அடையாளமாகிய உருத்திராட்சமே எனக்கு அரசியல் ஆபரணமாகவும், சடைமுடியே கிரீடமாகவும் இருத்தல் வேண்டும்!" என்றார்.

கல்வியிற் சிறந்த பெரியோர்களும், அமைச்சர்களும், "நல்லது வேந்தே! நாட்டைக் காத்தருளும்!" என்று அவர் சொற்களுக்கு உடன்பட்டார்கள். மங்கல ஓசையும் மறை முழக்கமும் வாழ்த்தொலியும் முழங்க மூர்த்தி நாயனார் அரசனாக முடிசூட்டப் பெற்றார்.

பிறகு முடிசூட்டிய மண்டபத்திலிருந்து மூர்த்தி நாயனார் புறப்பட்டு திருவாலவாய்த் திருக்கோயிலுக்குச் சென்று சொக்கலிங்கப் பெருமானை வாழ்த்தி வணங்கினார். அதன்பின் அவர் பட்டத்து யானையின் மேலேறி வீதிகளின் வழியாக மதுரை மாநகரை வலம் வந்தார். பிறகு அவர் அரண்மனையை அடைந்து யானையிலிருந்து கீழே இறங்கிச்சென்று பிரகாசமான ஆட்சிமன்றத்தினுள் புகுந்தார். அங்குள்ள பொன் சிம்மாசனத்தில் ஏறி, வெண்சாமரங்களால் காற்று வீசப்படும் வெண்கொற்றக்குடையின் கீழ் அமர்ந்து அரசு கொலுவீற்றிருந்தார்.

நீதி அமைச்சர்களெல்லாம் மூர்த்தியாரின் குறிப்பறிந்து நடந்தார்கள். நாட்டிலே கலகம் செய்து கொண்டிருந்த சமணர்களின் கட்டுப்பாடுகள் நீங்கின. திருவெண்ணீறு அணியும் நல்லொழுக்கம் நாட்டிற் பரவியது. சைவசமயம் நிலைபெற்றுச் செழித்து உலகெங்கும் நிரம்பி உயர்ந்தது. பாவங்கள் மாறிப், பிறவித் துன்பத்தை நீக்கவல்ல திருநீறு, உருத்திராட்சம், சடைமுடி மும்மையினால் மூர்த்தி நாயனார் உலகாண்டார்.

மூர்த்தி நாயனார் புலனடக்கத்தில் உறுதிகொண்டு, பெண்களிடம் ஈடுபடுதலை என்றென்றும் நீத்துப் பிரமச்சாரியாக விளங்கினார். ஐம்புலப் பகையாகி உட்பகையும், சமணர், வேற்றரசர் என்று புறப்பகையையும் அவர் வென்றொழித்தார். உயிர்களுக்கு இடரானவற்றையும் நீக்கி உலகத்தை நெடுங்காலம் காத்து ஆக்ஞா சக்கரத்தை நல்வழியில் நடத்தினார். வேற்றரசர்கள் பாதம் போற்ற. உலகத் துன்பங்கள் நீங்க, மூர்த்தியார் அரசாண்டார். அவர் பேரரசராகத் திகழ்ந்தபோதிலும், தம் திருத்தொண்டில் மாறுதல் இல்லாமல் சிவபெருமானுக்குரிய தீவிரபணிகளைச் செய்து கொண்டிருந்து இறுதியில் இறைவனது திருவடிநிழலை அடைந்தார்.

எம்பெருமானுக்காக அன்று முழங்கையைத் தேய்த்து அதன்பின்னர், யானைமீது மன்னராக ஏறிச்சென்ற மூர்த்தி நாயனாரைப் போற்றுகின்றேன். அடுத்ததாக மூர்த்தி நாயனாரின் அருந்தொண்டைச் சொலகிறேன்.

**"மும்மையா லுலகாண்ட மூர்த்திக்கும் அடியேன்"**

**- சுந்தரர்**

# அருள்

அருளாவது, இவை தொடர்புடையவை என்றும், இவை தொடர்பில்லாதவை என்றும் நோக்காது இயல்பாகவே எல்லாவுயிர்கள் மேலும் செல்வதாகிய கருணை. அருளெனினும், கருணை எனினும், இரக்கமெனினும் பொருந்தும். உலக இன்பத்திற்குக் காரணம் பொருளேயாதல்போல தருமத்திற்குக் காரணம் அருளேயாகும். அருளெனும் குணம் யாவரிடத்தில் இருக்குமோ, அவரிடத்தே பழி பாவங்கள் எல்லாம் சிறிதும் அணுகாது நீங்கிவிடும். வாய்மையாகிய தகழியிலே பொறுமையாகிய திரியை இட்டுத் தவமாகிய நெய்யை நிறையப் பெய்து, அருளாகிய விளக்கை ஏற்றினால், அஞ்ஞானமாகிய பேரிருள் ஓட்டெடுப்ப, பதியாகிய மெய்ப்பொருள் வெளிப்படும். மரணபரியந்தம் தன்னுயிரை வருந்திப் பாதுகாத்தல் போலப் பிறவுயிர்களையும் வருந்திப் பாதுகாப்பவன் யாவனோ, அவனே உயிர்களுக்கெல்லாம் இதஞ்செய்பவனாகி, தான் என்னாளும் இன்பமே வடிவாக இருப்பான்.

உயிர்களெல்லாம் கடவுளுக்குத் திருமேனிகள். அவ்வுயிர்களுக்கு நிலைக்களமாகிய உடம்புகளெல்லாம் கடவுளுக்கு ஆலயங்கள். ஆதலால், கடவுளிடத்து மெய்யன்புடையவர்கள் அக்கடவுளோடு உயிர்களுக்கு உளதாகிய தொடர்புபற்றி அவ்வுயிர்களிடத்தும் அன்புடையவர்போல் ஒழுகுதல் நாடக மாத்திரையேயன்றி உண்மையன்றென்பது தெள்ளிதின் துணியப்படும். பிறஉயிர்களித்து இரக்கம் இல்லாதவர் தம்முயிருக்கு உறுதிசெய்து கொள்ளமாட்டார். ஆதலால், அவர் பிறவுயிர்களிடத்து மாத்திரமன்றித் தம்முயிரிடத்தும் இரக்கம் இல்லாதவரேயாவர். அவர் தமக்குத்தாமே வஞ்சகர்.

# திருமுறையிலே......

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப் பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன் மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம் பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிவல் லானுக்கே பல்லாண்டு கூறுதுமே

பலரும் இந்தத் திருப்பல்லாண்டை ஓதும்போது மூன்றாவது வரியில் 'ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம்பலமே இடமாக' என்பதை, 'ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற தில்லைச் சிற்றம்பலமே இடமாக' என்று ஒரு தில்லையைச் சேர்த்து ஓதுகிறார்கள். அது தவறு.

இந்தச் செய்யுள் ஒன்பதாந் திருமுறையிலே இருபத்தொன்பதாவது பதிகத்திலே ஒன்பதாவதாக வருகிறது. கோயில் எனப்படும் சிதம்பரத்திலுள்ள நடராஜப்பெருமான் மீது சேந்தனார் பாடிய திருப்பல்லாண்டு இது.

பதஞ்சலி, வியாக்கிரபாதர் என்று இரு முனிவர்கள் சிதம்பரத்திலே பலகாலம் இருந்து வழிபட்டதாகத் தில்லைத் தலபுராணம் கூறும். வியாக்கிரபாத முனிவரின் மகன் உபமன்யு முனிவர். சிவனையன்றி வேறு யாரையுமே வணங்காத இந்த முனிவர், சுந்தரமூர்த்தி நாயனார் கயிலையை அடையும்போது எழுந்து வணங்கியதாகப் பெரியபுராணத்திலே சேக்கழார் குறிப்பிட்டுள்ளார். 'சம்புவின் அடித்தாமரை' என்று தொடங்கும் செய்யுளிலே இந்த விவரம் வருகிறது. உபமன்யு முனிவர் சிறு குழந்தையாய் இருந்தபோது பால் வேண்டி அழுதார். திருஞானசம்பந்தருக்கு ஒரு பொற்கிண்ணத்திலே உமையம்மையுடன் எழுந்தருளிப் பால்கொடுத்த இறைவன் உபமன்யு முனிவருக்கு ஒரு பாற்கடலையே தோற்றுவித்துக் கொடுத்ததாகக் கோயிற்புராணம் புகல்கிறது. அதையேதான் சேந்தனார், 'பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப் பாற்கடல் ஈந்தபிரான்' என்று பாடியுள்ளார்.

திருமால் வழிபட்டு வேண்ட, சிவன் சக்கராயுதத்தை அவருக்கு அளித்தான். 'மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்'. மன்னிய - நிலைபெற்ற தில்லைத் தலத்திலே வேதங்களை ஆலிக்கும் - ஓதுகின்ற அந்தணர்கள் வாழ்வதற்கு முதலாய் இருக்கின்ற சிற்றம்பலத்தை இடமாகக் கொண்டு, பாலித்து - அருளை வழங்கி, நட்டம் பயில வல்லான் - திருநடனம் செய்கின்ற நடராஜப்பெருமானை நாம் பல்லாண்டு வாழ்க என வாழ்த்துவோம்.

பிறப்பு, இறப்பு அற்றவன் இறைவன். அவனை வாழ்த்தவேண்டுமா? அவனை வாழ்த்த நாம் யார்? என்ற கேள்விகள் எழலாம். சலமிலனாகிய சங்கரனை நாம் வாழ்த்தினாலும், வாழ்த்தாவிட்டாலும் வேறுபாடு கிடையாது. வாழ்த்துவது நம் மனமகிழ்ச்சிக்காகவே அன்றி இறைவனுக்காக அன்று.

திருப்பல்லாண்டு சைவ சமயத்தில் மட்டுமன்றி, வைணவ மதத்திலும் உள்ளது. ஸ்ரீ வில்லிபுத்தூரிலே அவதரித்த பெரியாழ்வார் பாடிய திருப்பல்லாண்டு வைணவ பாசுர நூலாகிய நாலாயிரத் திவ்விய பிரபந்தத்தில் உள்ளது.

# சைவ முன்னேற்றச் சங்கத்தில்



## மிருதங்க வகுப்புக்கள்

சைவ முன்னேற்றச் சங்கத்தின் நால்வர் தமிழ்க் கலை நிலையம் பாட்டு, வீணை, நடனம், வயலின் வகுப்புக்களைச் சிறப்புற நடத்திவருவதை நீங்கள் அறிவீர்கள்.

அங்கு மிருதங்க ஆசிரியராக, திரு சோமசுந்தர தேசிகர் (சோமு மாஸ்டர்) அவர்கள் பணியாற்றி வருகிறார். அவரின் மிருதங்க வகுப்புக்களில் பயில விரும்புவோர் பின்வரும் தொலைபேசி எண்களிற் தொடர்புகொண்டு விவரங்களைப் பெறலாம்.



**07 711 044 509, 0208 949 5513**

## Saiva Munnetta Sangam's Mridanga Teacher

## Sri Somasundaram Desigar

Sri Somasundara Desigar, is the son of the Late Sri Ayyakkannu Desigar (Former Principal of Ramanathan Academy). He hails from a family dedicated to music. He commenced his tutelage under Great Mridanga Vidwan Tanjoor Sri A.S.Ramanathan. Later, he underwent advanced training under the renowned Mridanga Maestro, Guru Kaaraikkudi R Mani. Soon, he was given the rare opportunity of being present in the innauguration of Sruthi Laya Seva (now known as Sruthi Laya Kendra) in 1986 founded by Sri Guru Kaarainkkudi R Mani. He subsequently became the first teacher in this school promoting Carnatic percussion.

Somasundaradesigar accompanied many Leading musicians, like Tanjooor Sri S Kalyanaraman Sri T K Govindarao, Sri Lalgudi G Jayaraman along with his Guru. He also has accompanied Kathri Gopalnath, Lalgudi G J R Krishnan and Vijayalakshmi, Smt Bombay Jayasri, Smt Sowmya, Sri P Unnikrishnan, Sri Rajesh Vaidya, Sri Sikil Gurucharan and many more. He has also performed in several concerts and festivals in Europe, Canada and Australlia. Sri Somasundara Desigar has been residing in London for over 20 years, teaching Mridangam to many students. He promotes the young talent in the UK through his organisation, "Rasikipriya" along with his beloved wife, Chithra Also he is the head of Mridangam in The Oriental Fine Arts Academy of London (OFAAL). Somasundara Desigar is also a talented vocalist and a gifted composer.

Enlightenment Circle

**எல்லா வயதினருக்கும் யோகாசன வகுப்புக்கள் இங்கே நடைபெறுகின்றன.**



**Yoga lessons are held here for all age groups**

**Contact our team on : 07830 374780 / 07730 313379.**

# கண்ணனும் தாத்தாவும்



- முத்து

ஆனிமாதம் இலண்டனில் சீரான காலநிலை என்றுமே இருந்தததில்லை. (பிரித்தானிய தீவு நாலுபக்கமும் கடலாற் சூழப்பட்டிருப்பது ஒரு காரணமாக இருக்கலாம்). ஆனால் அன்று மனதுக்கு இதமாகச் சூரியன் ஒளி வீசிக்கொண்டிருந்தான். அதனால், தாத்தா ஸ்ரீ சிவகாமசுந்தரி உடனுறை ஸ்ரீ சிதம்பரேசுவரர் ஆலயத்தில் ஆனி உத்தரத் திருமஞ்சனம் பார்க்கச் சென்றிருந்தார். அபிஷேகம், பூசை, சுவாமி புறப்பாடு, திருவூஞ்சல் எல்லாமே சிறப்பாக நடந்து நிறைவுற்றன. அந்தச் சூழல் மிகவும் பத்திபரவசமாக இருந்தது. தாத்தா மனம் நிறைவாக இறைவனை வணங்கினார். பின்னர், அங்கு வாய்க்குச் சுவையான பிரசாதமும் வழங்கினார்கள். வீடு திரும்பிய தாத்தா சோபாவில் இருந்து சிறிது கண்ணயர்ந்தார். கண்ணன் பள்ளிக்கூடத்தால் வந்து அழைப்பு மணியை அடிக்கவும் திடுக்கிட்டு எழுந்து கதவைத் திறந்தார். கண்ணனுக்கு ஆச்சரியமாக இருந்தது. ஏனென்றால், தாத்தா கண்ணனின் வருகைக்காக எப்போதுமே காத்திருப்பார். கதவு மணியையடிக்க முதலே கதவைத் திறப்பார்.

கண்ணன்: என்ன தாத்தா? இன்று கதவு திறக்க இவ்வளவு நேரம்! குட்டித் தூக்கம் போட்டீர்களா?

தாத்தா: ஆமாடா கண்ணா! நீ சொல்வது சரிதான். இன்று ஆனி உத்தரத் திருவிழா பார்க்கச் சைவ முன்னேற்றச் சங்கத்தின் சிதம்பரேஸ்வரவர் கோயிலுக்குப் போயிருந்தேன்.

கண்ணன்: எப்படியிருந்தது தாத்தா, நன்றாகச் சுவாமி கும்பிட்டீர்களா?

தாத்தா: ஆமாம் கண்ணா! திருவிழா மிக நன்றாகவே நடைபெற்றது. சிவகாமியம்மை, சிதம்பரேசுவரருக்குத் திருவூஞ்சலும் நடைபெற்றது. ஓதுவார்மூர்த்தி திருப்பொன்னூசலை மிக உருக்கமாகப் பாடினார்கள். ஒவ்வொரு பாடலும் பாடி முடிய, குருக்கள் தீபம் காட்டி, ஊஞ்சலையும் ஆட்டினார். பத்தர்கள் அனை வரும் திருவாசகத்தைக் கேட்டும், சிதம்பரேசுவரர், சிவகாமியம்மை அழகைக் கண்டும் மிகவும் இரசித்தனர். எனக்கும் மிக மனநிறைவாக இருந்தது.

கண்ணன்: திருப்பொன்னூசல் பாடல்களைப் பாடியது யார் தாத்தா?

தாத்தா: அது திருவாசகத்திலே வரும் சுவையான பாடற்பகுதி. அதைப் பாடியவர் மாணிக்கவாசகர்.

கண்ணன்: இன்று பள்ளி இல்லாவிட்டால் நானும் உங்களோடு வந்திருப்பேன். நடன நிகழ்ச்சியும் இருப்பதாகச் சொன்னார்களே!

தாத்தா: ஆமாம் கண்ணா! ஒரு சிறிய பெண் சிவனைப்பற்றிய ஒரு கீர்த்தனைக்கு மிக அழகாக நடனம் ஆடினாள். அதுவும் இன்றைய திருவிழாவுக்கு மிகவும் பொருத்தமாகவே இருந்தது.

கண்ணன்: வேறு என்ன நடைபெற்றது?

தாத்தா: விபூதி, தீர்த்தப் பிரசாதங்கள் பெற்றுக்கொண்டு கீழே வந்தபோது, வாய்க்குச் சுவையான பிரசாதமும் தந்தார்கள். அதையும் நான் சுவைத்து மகிழ்ந்தேன்.

கண்ணன்: எனக்கு நீங்கள் சொல்லித் தந்த பழமொழி ஒன்று இப்போ ஞாபகம் வருகிறது. 'உண்ட களை தொண்டருக்கும் உண்டு' சரிதானே தாத்தா?

தாத்தா: எனக்கு இன்று நடந்தது அதேதான் கண்ணா! சரி, நீ போய்க் கால் கை கழுவிட்டு எனக்கும் உனக்கும் குடிப்பதற்குப் பாட்டியிடம் ஏதாவது வாங்கி வா. நான் உனக்கு ஒரு கதை சொல்லப்போகிறேன்.

கண்ணன்: அப்படியா தாத்தா! இதோ ஐந்து நிமிடத்தில் வந்துவிடுவேன்.

**(கண்ணன் சில நிமிடங்களில், தனக்குப் பழச்சாறும் தாத்தாவுக்குத் தேநீரும் கொண்டுவருகிறான்)**

தாத்தா: என்ன கண்ணா! வெகு விரைவாகவே வந்துவிட்டாய்?

கண்ணன்: அதுதான் நீங்கள் கதை சொல்லப்போகிறீர்களே! அந்த ஆவல்தான் தாத்தா! என்ன கதை? சொல்லுங்கோ!

தாத்தா: சிவனின் திருவிளையாடல் பற்றிய கதை ஒன்று சொல்லப்போகிறேன்.

கண்ணன்: அது என்ன திருவிளையாடல் தாத்தா?

தாத்தா: இந்திரனுடைய வெள்ளையானை சாபம் நீங்கிய கதை.

கண்ணன்: தேவலோகத்து அரசன் இந்திரனா?

தாத்தா: ஆமாம் கண்ணா! தேவர்களின் அரசன் இந்திரன் ஒருநாள் அசுரர்களை வென்று வெற்றிவாகை சூடி, பெருமிதமாகத் தனது வெள்ளையானையில் வந்துகொண்டிருந்தான். தேவர்கள் எல்லோருமே அவனது வெற்றியைப் பாராட்டிப் பல பரிசில்களைக் கொடுத்துக் கௌரவித்துக்கொண்டிருந்தனர். அந்த நேரம் துருவாச முனிவர் தன் சிவபூசையை முடித்தபோது, சிவனின் திருமுடியிலிருந்து விழுந்த தாமரைப் பூவைப் பத்தியுடன் எடுத்துக் கண்ணில் ஒற்றிக்கொண்டு சுவர்க்கலோகம் வந்தார். அங்கே எல்லோரும் இந்திரனைக் கௌரவிப்பதைக் கண்டு முனிவரும் இந்திரனுக்கு ஆசி வழங்கி, தன் கையில்

இருந்த தாமரைப் பூவைக் கொடுத்தார்.

கண்ணன்: அந்த அருச்சனைப் பூவை வாங்கி இந்திரனும் கண்ணில் ஒற்றிக்கொண்டு தலையிலே சூடினானா?

தாத்தா: அதுதான் இல்லை, கண்ணா. வெற்றியினாற் கருவங்கொண்டிருந்த இந்திரன் அந்தப் பூவின் அருமையை உணராது, ஒரு கையால் வாங்கித் தன் யானைமீது வைத்தான். யானை அதனைக் கீழே தள்ளிக் காலால் மிதித்தது.

கண்ணன்: அப்படியா தாத்தா? துருவாச முனிவருக்கு மிகவும் கோபம் வந்திருக்குமே!

தாத்தா: ஆமாம் கண்ணா. துருவாசர் கடுங்கோபங்கொண்டு சாபமிட்டார்.

கண்ணன்: யானைதானே பூவை விழுத்தி மிதித்தது. அதற்கு இந்திரனுக்கு ஏன் சாபம் போட்டார்?

தாத்தா: அந்தக் காலத்தில் அரசர்கள் முனிவர்களைக் கண்டால், அவர்களுக்கு உரிய மதிப்பளித்து வணங்குவர். இந்திரன் முனிவரை அலட்சியம் செய்ததுடன் அவர் கொடுத்த பூவையும் ஒரு கையால் வாங்கி, யானைமீது வைத்தான். அது தப்புத்தானே கண்ணா!

கண்ணன்: ஆமாம் தாத்தா! இந்திரன் முனிவர் கொடுத்த பூவைப் பத்திரப்படுத்தி வைத்திருக்கலாம். யானைமேல் வைத்தபடியால் அது அதைக் கீழே விழுத்தியது.

தாத்தா: யானை விழுத்தியது மட்டுமல்லாமல் மிதித்தது. அதனால் முனிவருக்கு யானை மீதும் கோபமேற்பட்டது.

கண்ணன்: அதனால், இந்திரனுக்கு மட்டுமன்றி யானைக்கும் சாபம் போட்டாரா தாத்தா?

தாத்தா: ஆமாம் கண்ணா! இந்திரனைப் பார்த்து, 'வெற்றிச் செருக்குக் கொண்ட இந்திரா! என்ன காரியம் செய்தாய்? சிவனின் முடிமேல் சாத்தப்பட்ட பூவை மதிக்காது யானை மிதிக்கும்படி செய்துவிட்டாய். பாண்டியன் ஒருவனால் உன் தலை சிதறுண்டுபோகும்' என்று கோபத்துடன் சபித்தார்.

கண்ணன்: முனிவர் சொன்னபடி நடந்துவிடுமா தாத்தா? யானைக்கு அவர் என்ன சாபங் கொடுத்தார்? இதனைப் பார்த்த தேவர்கள் என்ன செய்தார்கள்?

தாத்தா: முனிவர்களின் சாபம் நிச்சயம் பலிக்கும் கண்ணா! அவர்கள் கடவுளிடம் அளவற்ற பத்தி கொண்டவர்கள். கடவுளுக்குச் சமமானவர்கள். அவர்கள் வாழ்த்தினாலும் நடக்கும், சபித்தாலும் பலிக்கும் (நடக்கும்). வெள்ளை யானை இந்திரலோகத்தை விட்டுப் பூலோகம் வந்து காட்டு யானையாகி வாழும் என்றார். இதனைக் கேட்ட தேவர்கள் நடுங்கிச் சாபத்தை நீக்கவேண்டுமென்று முனிவரை வணங்கி நின்றார்கள்.

கண்ணன்: துருவாசர் மன்னித்துச் சாபத்தை நீக்கினாரா தாத்தா?

தாத்தா: துருவாசர் தேவர்களுக்கு, 'சிவநிந்தனை பரிகாரத்தால் தீராது. அவர்கள் தண்டனையை அநுபவித்தாகவேண்டும். இந்திரனுக்குத் தலைக்கு வந்தது முடியளவிற் போகக் கடவது' என்று சொன்னார்.

கண்ணன்: அப்படியென்றால் என்ன தாத்தா?

தாத்தா: தலையளவில் வந்தது என்றால், அவனுக்குத் தலை சிதறிவிடும் என்றார் அல்லவா? தலைக்குக் கெடுதல் வரமாட்டாது. முடியை (அரசை) மட்டும் இழப்பான் என்று அர்த்தம். யானை நூறு வருடங்கள் காட்டில் மற்ற யானைகளுடன் திரிந்து பின் பழையபடி இந்திரலோகம் வந்து சேரும் என்றார்.

கண்ணன்: ஆணவம் ஒருவருக்கு வந்தால் அழிவு நிச்சயம் என்று கந்தபுராணம் பற்றிச் சொன்னபோது சொல்லித் தந்தீர்கள் தாத்தா! இந்திரனுக்கும் அதுதான் நடந்தது. இல்லையா தாத்தா?

தாத்தா: ஆமாம் கண்ணா! கெட்டிக்காரன். படித்ததை மறக்காமல் வைத்திருக்கிறாயே!

கண்ணன்: கற்ற நல்ல விஷயங்களை மறந்தால், கற்பதிலே பயனில்லை என்று நீங்கள்தான் அடிக்கடி சொல்வீர்களே! அதனால் நான் மறக்கக்காமல் எல்லாவற்றையும் அடிக்கடி திருப்பி நினைத்துக்கொள்வேன். பின்பு அவை மனதில் பதிந்துவிடும்.

தாத்தா: நீ மிகவும் புத்திசாலி கண்ணா! உன்னை நினைக்க மிகவும் பெருமையாக இருக்கிறது. எல்லாப் பிள்ளகளுமே உன்னைப்போல இருக்கவேண்டும் என்பதே என் ஆசை.

கண்ணன்: எனக்கும் உங்களைப் பற்றிப் பெருமைதான். என் நண்பர்களுக்கெல்லாம் தங்களுக்கு இப்படியொரு தாத்தா இல்லையே என்று கொஞ்சம் கவலைதான்.

தாத்தா: நீ நல்லதென்று நினைப்பதையெல்லாம் அவர்களுடன் பகிர்ந்துகொள்ள வேண்டும் கண்ணா! அப்போதுதான் அவர்களுக்கும் நல்ல விஷயங்களைக் கேட்டறியவேண்டும் என்ற ஆவல் ஏற்படும்.

கண்ணன்: வாய்ப்புக் கிடைத்தபோதல்லாம் சொல்லுவேன் தாத்தா. பாவம் அந்த யானை, இந்திரலோகத்தில் வசதியாக வாழ்ந்திருக்கும். இலண்டனில் நாய் பூனைகள் இருப்பதைப்போல! காட்டில் எப்படிக் கஷ்டப்பட்டதோ?

தாத்தா: சரியாகச் சொன்னாய் கண்ணா! நூறு வருடங்கள் காட்டில் அந்த யானை திரிந்தது. நூறு வருடங்கள் முடியும் வேளையில் அது கடம்பவனத்துக்கு வந்தது. அங்கே பொற்றாமரை வாவியைக் (குளம்) கண்டது. அதிலே இறங்கிக் குளித்தது. உடனே அது வெள்ளை யானையாகிவிட்டது.

கண்ணன்: அப்போ உடனே இந்திரலோகம் சென்றுவிட்டதா?

தாத்தா: இல்லை கண்ணா! சிவபெருமான் அருளாலே அது சொக்கலிங்கப் பெருமான் சந்நியை அடைந்தது. இறைவனை வணங்கியது. பின்பு தும்பிக்கையால் பொற்றாமரை வாவியில் நீரை எடுத்துவந்து இறைவனைக்கு அபிஷேகம் செய்தது. குளத்திலுள்ள தாமரைப் பூக்களை எடுத்துவந்து பூசை செய்தது.

கண்ணன்: ஆண்டவனை வணங்கவும் அவன் அருள் வேண்டும் என்பீர்கள் தாத்தா. யானைக்கும் கடவுள் அருள் கிட்டியிருக்கிறது.

தாத்தா: அதற்குச் சாபம் நீங்குங்காலம் வர இறையருளும் கிடைத்தது. அது அப்படிச்சிலகாலம் வணங்கிவர இறைவன் மனமரங்கி அதன்முன் தோன்றி, என்ன வரம் வேண்டும் என்று கேட்டார். யானை சொக்கநாதரை வணங்கிக் கொண்டு அங்கிருக்கவேண்டும் என்று சொன்னது.

கண்ணன்: கடவுள் அப்படியே ஆகட்டும் என்றாரா தாத்தா?

தாத்தா: இல்லை கண்ணா! இறைவன் யானைக்கு, 'இந்திரன் என் பத்தன். அவனைத் தாங்குவது என்னைத் தாங்குவதுபோலத்தான். எனவே இந்திரலோகம் செல்வாயாக' என்று அருள்செய்தார். அப்படியே யானை இந்திரலோகத்தை அடைந்தது.

கண்ணன்: அது முன்புபோல இந்திரனிடம் சென்று சந்தோஷமாக வாழ்ந்திருக்கும். என்ன தாத்தா?

தாத்தா: ஆமாம் கண்ணா! இறைவன் தன்னைப் பூசிப்பவர்களின் பக்கத்திலே எந்நேரமும் நின்று அவர்கள் குறையைத் தீர்ப்பார்.

கண்ணன்: இப்படியான இறைவனின் திருவிளையாடல்களை எங்கே படித்தீர்கள் தாத்தா?

தாத்தா: திருவிளையாடற் புராணம் என்ற புத்தகத்தில் இறைவனின் திருவிளையாடல்கள் அத்தனையும் உண்டு கண்ணா!

கண்ணன்: இன்னும் உங்களுக்குத் தெரிந்தால், சொல்லித்தாருங்கள் தாத்தா!

தாத்தா: நிச்சயமாகக் கண்ணா! இப்போது நேரம் 5 மணியாகிறது கண்ணா! இனி நீ போய் உனது வீட்டுப் பாடங்களைச் செய். நான் தமிழ் ஒளிபரப்பில் கோயிற் தேர்த்திருவிழா ஒன்று காட்டப்போகிறார்கள். பார்க்கப்போகிறேன்.

கண்ணன்: சரி தாத்தா.

தாத்தா தமிழ் ஒளிபரப்புப் பார்க்க ஆரம்பிக்க, கண்ணன் வீட்டுப்பாடங்களைச் செய்யத் தயாராகிறான்.

# Hinduism in search of answers...

## How can Atman achieve Moksha (or Mukti)?

The ultimate purpose of life, according to Hinduism, is to attain Moksha or Liberation from the cycle of births and deaths. Hindu scriptures and Sages show several paths to achieve this purpose. Saiva Agamas show a four fold path for all devotees:

### Sariyai

It is the first step, where the spiritual seeker worships a deity, especially at a temple. The deity is considered to be a full representation of the God. The devotee worships the deity mainly externally and serves by physical means.



**This worship can take many different forms, such as,**



**Cleaning the temple and premises,**



**Making garlands with flowers**



**Lighting a lamp and incense,**



**Helping other devotees in worshipping the deity, etc.**

A deep love for God develops in the mind of the devotee.
The relationship between God and devotee in this path is similar to that of a master and servant.

**Kiriyai**

It is the second stage in the spiritual life. As one matures in Sariyai, the soul seeks a greater longing to be one with the God, and Sariyai falls short on this. Kriyai is characterized by a combination of external worship to a Shiva Lingam (representing form and formless aspect of God) and worship of the Divinity within.



The internal worship is in the form of chanting of the mantras, often silently. A spiritual master, a Guru, is needed in this stage to guide the devotee towards the correct mantras to use

**சிவ மந்திரம்**

ஓம்

| | | | | |
|---|---|---|---|---|
| சி | வ | ய | ந | ம |
| வ | ய | ந | ம | சி |
| ய | ந | ம | சி | வ |
| ந | ம | சி | வ | ய |
| ம | சி | வ | ய | ந |

ஓம்

The Guru will expect a person to follow certain rules in his lifestyle before accepting him as his student.



In this stage the devotee feels increasingly closer to the Divine, as it starts to blossom within. The relationship between God and devotee in this path is similar to that of a father and son.

**Yogam**

It is the third stage in spiritual life where the emphasis is on the withdrawal from the external sensory stimuli in order to perform internal purification. This is done at several different levels: physical, mental and intellectual.

In Yogam, there is a full maturity of the mind and the seeker develops an ability to be detached from all things worldly. The spiritual seeker is able to bring the mind to a standstill.

**It consists of eight parts:**

- Yama : Universal morality
- Niyama : Personal observances
- Asanas : Body postures
- Pranayama : Breathing exercises, and control of prana
- Pratyahara : Control of the senses
- Dharana : Concentration and cultivating inner perceptual awareness
- Dhyana : Devotion, Meditation on the Divine
- Samadhi : Union with the Divine

**1. Yama** (Restraints or Social Disciplines).
Examples:
**Ahimsa** – Non violence




(to all other living beings or environment – in thought, word and deed)

**Sathya** - Non Falsehood or Truthfulness in intention, words and actions.







**steya** – Non stealing in thought, words and deed.



**Brahmacharya** – Sensual and sexual control











**Apari-graha** – Abstention from greed. Avoidance of unnecessary acquisition of objects.

**2. Niyama** (Observances or Individual Disciplines)
Examples:

| | |
|---|---|
| **Sausam** – | Cleanliness and Purity, externally and internally (mental). |
| **Santhosam** – | Happiness and contentment in any situation. |
| **Tapas** – | Austerity – Commitment to Yoga practices |
| **Svadhyaya** – | Spiritual self education |
| **Iswara Pranidhana** – | Surrendering to God |

## நீர்நிலையும் கடவுள் சிலையும்

அண்மையில் விநாயக சதுர்த்தி மிகச் சிறப்பாக நிகழ்ந்தது. விழா நிறைவுற்றபின் விநாயகர் சிலையைக் கடலிலே கொண்டு சென்று இட்டார்கள். இது சரியா? கடவுளைக் கடலிலே இடலாமா? இரண்டு மாதர்நடுவில் நடந்த உரையாடல் இது.

பொதுவாக, வழிபடும் கடவுட் திருவுருவை வழிபாடு முடிந்ததும் கால்படாத இடத்திலே இடவேண்டும் என்பது விதி. நீர்நிலைகளை, கடலை நாம் கால்படாத இடமாகக் கருதுகிறோம். யாழ்ப்பாணத்தில் மார்கழி மாதம் முழுவதும், தினமும், முற்றத்திலே பிள்ளையாரைப் பிடித்து வைத்து, பின் பொங்கலன்று மோதகம் படைத்து வழிபட்டு, நீர்நிலைகளிலே இடுவோம். அதுபோலவே ஆவணிச் சதுர்த்தியில் வழிபடும் கணபதியும் நீரிலே கரைகின்றார்.

வீட்டிலே சிவபூசை செய்யும் சிவலிங்கத்தையும், அந்தப் பூசை செய்தவர் மறைவுக்குப் பின் நீர் நிலைகளிலேதான் இடுவார்கள். திருவுருவம் சிதைந்துவிட்டாலும் அது வழிபாட்டுக்கு உகந்ததல்ல. அப்படிச் சிதைந்த திருவுருவங்களுக்கும் அதே கதிதான்.


லண்டனில் No1 நகை மாளிகை
Lakshmis Jewellers
எங்கள் மாதாந்திர
நகைச்சீட்டு
திட்டத்தில் சேர்ந்து
பயனடையுங்கள்
தரமான தங்கத்துக்கு லண்டனில் நாடவேண்டிய ஒரே இடம்
லட்சுமி ஜுவலர்ஸ்
276 High Street North London E12 6SA UK
Tel : 020 8470 5600 Fax : 020 8470 3448
எங்களுக்கு வேறெங்கும் கிளைகள் இல்லை



First Sri Lankan Jewellery shop in U.K.

WESTERN
JEWELLERS

Jewellers & Gem Merchants

230,UPPER TOOTING ROAD
LONDON SW17 7EW
PHONE : 020 8767 3445

SILK EMPORIUM

122 UPPER TOOTING ROAD LONDON SW17 7EN
PHONE : 020 8672 1900

WESTERN
JEWELLERS & TEXTILES

5, PLAZA PARADE, 29-33, EALING ROAD,
WEMBLEY, MIDDLESEX HA0 4YA.
PHONE : 020 8903 0909



OPENING HOURS
Monday to Saturday
10.00am - 6.30pm
Sunday 11.00am - 5.30pm


இலண்டனில் Setline Data அச்சகத்தால் (தொலைபேசி: 0207 232 0446) அச்சிடப்பட்டு,
சைவ முன்னேற்றச் சங்கத்தால் 16-10-2015 அன்று வெளியிடப்படுகிறது.